


விலை ரூபா 40
பக்கங்கள் - 12

# ஒருவன்

ஆண்டு: 01 இதழ் : 45 குரோதி வருடம்
கார்த்திகை மாதம் 26 ஆம் திகதி புதன்கிழமை (11.12.2024)




# காணாமலாக்கப்பட்டோருக்கு நீதிகோரி வடக்கு, கிழக்கில் நேற்று ஆர்ப்பாட்டங்கள்


வவுனியாவில்...
படம் : கி. வசந்தன்



திருமலையில்...
படம் : கீதபொன்கலன்


மட்டக்களப்பில்....
படம் : சரவணன்

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வடக்கு,கிழக்கு பிரதேசங்களில் ஆர்ப்பாட்ட பேரணியில் ஈடுபட்டனர்.

வவுனியா,முல்லைத்தீவு,கிளிநொச்சி,திருகோணமலை,மட்டக்களப்பு உள்ளிட்ட பகுதிகளில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஆர்ப்பாட்ட பேரணிகளை முன்னெடுத்தனர்.

நீதிக்காக 2,850 நாட்களாகத் தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் அவ் உறவுகள் தங்களது சரணடைந்த, கையளிக்கப்பட்ட, கைது செய்யப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறிய முக்கியமான நான்கு காவலரண்களுக்குப் பொறுப்பாக இருந்த இராணுவ அதிகாரிகள் விசாரிக்கப்பட்டு உண்மை அறியப்பட வேண்டும் என வலியுறுத்தினர்.

வாழ்வதற்கான உரிமை மறுக்கப்பட்ட தங்களது அன்புக்குரியவர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டு 15 வருடங்கள் கடந்துவிட்டன என தெரிவித்து கடந்த 15 வருடங்களாக எதிர்கொள்ளும் அவலங்களை விளக்கி நீதி கேட்டு போராடி வரும் அவர்கள் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைத்துள்ள கோரிக்கை கடிதம் பக்கம் 09ல்.....

## கட்டுப்பாட்டு விலையில் சந்தையில் அரிசி இல்லை

### பொது மக்கள் விசனம்


▌கனூஷியா புஷ்பகுமார்

காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் பெரும்பாலான மக்கள் நுகரும் சிவப்பு பச்சை அரிசி இன்னும் அரசாங்க கட்டுப்பாட்டு விலையில் கிடைக்கவில்லை என நுகர்வோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.



காலி மாவட்டத்தின் கடைகளில் சிவப்பு பச்சை அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், 02 →

## வங்கக்கடல் தாழமுக்கம்: இலங்கையில் கனமழைக்கு வாய்ப்பு



வங்கக்கடலில் நிலவும் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி, ஆழ்ந்த தாழ்வுப் பகுதியாக மாறுவதில் தொடர்ந்து தாமதம் நீடிக்கிறது என இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ளது. 02 →

## சபாநாயகர் அசோக ரன்வலவின் கல்வித் தகுதி - நீக்கப்பட்ட பதவி தொடர்பில் விளக்கம்

▌எஸ்.டொரின்

சபாநாயகர் அசோக ரன்வலவின் கல்வித் தகுதி தொடர்பான விமர்சனங்கள் அண்மைய நாட்களில் எழுந்ததையடுத்து,

இலங்கை நாடாளுமன்றத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் அவரின் பெயருக்கு முன்னாள் இருந்த “டாக்டர்“ என்ற தலைப்பை நீக்கியுள்ளது.



தற்போது வெறுமனே அசோக ரன்வல எம்.பி என்றே காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

சமூக ஊடக ஆர்வலர்கள் பேஸ்புக்கில் அவரது நற்சான்றிதழ்கள் குறித்து கேள்வி எழுப்பியதை அடுத்து சர்ச்சை எழுந்தது. இதுதொடர்பில், முன்னாள் தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் மஹிந்த தேசப்பிரியவும் சபாநாயகர் கல்விப் பட்டத்தை நிரூபிக்குமாறு தனது பேஸ்புக் பக்கத்தின் வாயிலாக சவால் விடுத்தார். 02 →

## ஜனாதிபதி அநுர 15ஆம் திகதி இந்தியா பயணம்



▌கனூஷியா புஷ்பகுமார்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த 02 →

## உதயங்க, கபில சந்திரசேனவிற்கு அமெரிக்காவில் நுழையத் தடை

### அமெரிக்க இராஜாங்க திணைக்களம் அறிவிப்பு

ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேன ஆகியோருக்கு அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தடைகள் மற்றும் வீசா கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.



இவர்களுக்கு எதிரான நிதி மோசடி சம்பவங்கள் தொடர்பில் இந்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 02 →

## சிலிண்டர் : தேசிய பட்டியலுக்கு பைசர் முஸ்தபாவின் பெயர் பரிந்துரை



புதிய ஜனநாயக முன்ன ணியின் தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவிக்காக பைசர் முஸ்தபாவின் பெயர் தேர்தல் ஆணைக்குழுவுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. 02 →

## வெள்ளத்தால் அறுவடை பாதிக்கப்பட்ட நெல்வயல்களுக்கு ஏக்கருக்கு ரூ.40,000

### மண்மூடிய நெல்வயல்களுக்கு ஏக்கருக்கு 7,500/-

▌முகம்மட் முக்தார்

அண்மைய வெள்ளம் காரணமாக சேதமடைந்த நெற்காணிகளுக்கான நஷ்ட ஈடு வழங்கல் தொடர்பாக, நஷ்ட ஈட்டுத்தொகை தொடர்பில் விவசாய அமைச்சின் கமநல காப்புறுதி சபை சுற்றுநிருபமொன்றை வெளியிட்டுள்ளது.

குறித்த சுற்றுநிருபத்திற்கமைய அறுவடைக்குத் தயாராக இருந்து மழைவெள்ளத்தில் அழிந்த நெல்வயல்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 40,000 ஷரூபா வழங்கப்படும். 02 →




## இலங்கையில் சிறுவர்களிடையே பரவும் வைரஸ்

▌து.சிந்துஜா

இன்ஃப்ளுவென்ஸவைப் போன்ற நோயொன்று இலங்கையில் சிறுவர்களிடையே பரவி வருகின்றமை பெற்றோர் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.



இந்த நோய்ப் பரவலுக்கு காய்ச்சல், குளிர், தலை வலி, 02 →

## சுகாதார, ஊடக அமைச்சுகளின் செயலாளராக அனில் ஜாசிங்க

சுகாதார, ஊடக அமைச்சுகளின் புதிய செயலாளராக விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்கவை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நியமித்துள்ளார்.

அதற்கமைய ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி சனத் நந்திக குமாநாயக்க, விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்கவிற்கு நேற்று (10) நியமனக் கடிதத்தை ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்துக் கையளித்தார் .



# வங்கிகளால் ஆதன ஏலவிற்பனை செய்யும் காலத்தை நீடிக்க அமைச்சரவை அனுமதி

**எஸ்.டொரின்**

வங்கிகளால் உரித்து பெறப்பட்டு ஏலவிற்பனை செய்யும் நடவடிக்கையை கைவிடும் காலத்தை மேலும் நீடிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நேற்று(12) இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சரவை ஊடக பேச்சாளர் அமைச்சர் நலின் ஜயதிஸ்ஸ இவ்விடயத்தைத் தெரிவித்தார்.

கடந்த நான்கு ஆண்டு காலத்தில் இலங்கை முகங்கொடுத்த பொருளாதார நெருக்கடிகள், சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில்முயற்சி பிரிவுக்கு கடுமையான தாக்கம் ஏற்பட்டது. இதனால் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள் வங்கிகளிலிருந்து பெற்ற கடன்களைத் தீர்க்கும் போது நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருப்பதாகத் தெரியவருகிறது. கடனை செலுத்த முடியாமை காரணமாக கணிசமானளவு வர்த்தகர்களின் ஆதனங்கள் வங்கிகளால் உரித்து பெறப்பட்டு ஏலவிற்பனை செய்யும் சூழல் உருவாகியிருப்பதன் காரணமாக 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தில் திருத்தம் செய்து அதன்மூலம் ஆதனங்களை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல் 2024.12.15 திகதி வரை தற்காலிகமாகக் கைவிடப்பட்டது.

இதனை (பராட்டே சட்ட கைவிடுதலை) தொடர்ந்தும் நீடிக்குமாறு சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில்முயற்சி பிரிவுடன் தொடர்புடைய சங்கங்கள் கோரிக்கைகளை முன்வைத்துள்ளன. ஆதனங்களை ஏலவிற்பனை செய்வதற்கு இடமளிப்பதற்கு அவ்வாறு கடன்களை மீள செலுத்துவதற்கான செயற்பாட்டுத் திட்டத்தை அறிமுகம் செய்வதன் மூலம் இருதரப்புக்கும் நியாயமான தீர்வு கிடைப்பதற்குத் தேவையான சூழமைவை உருவாக்குதல் மிகவும் பொருத்தமானது என அரசால் அவதானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2025.03.31 திகதி வரை பராட்டே சட்ட அமுலாக்க கைவிடுதலை நீடிப்பதற்கும், இலங்கை மத்திய வங்கியால் அரச மற்றும் தனியார் வங்கி மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரினதும் வினைத்திறனான பங்களிப்பின் மூலம் குறித்த பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பன்முக பொறிமுறையை உருவாக்குவதற்கும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

# அரிசிக்கான அதிகபட்ச விலை நிர்ணயம் : வர்த்தமானி வெளியீடு



உள்நாட்டு அரிசிக்கான அதிகபட்ச விலைகளை நிர்ணயம் செய்து வர்த்தமானி அறிவித்தல் நேற்று செவ்வாய்க்கிழமை (10) வெளியிடப்பட்டது.

நுகர்வோர் அதிகாரசபையால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி, ஒரு கிலோகிராம் பச்சை மற்றும் சிவப்பு பச்சை அரிசியின் அதிகபட்ச மொத்த விலை 215 ரூபாவாகவும், அதிகபட்ச சில்லறை விலை 220 ரூபாவாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு கிலோகிராம் உள்நாட்டு அரிசியின் மொத்த விலை 225 ரூபாவாகவும், அதிகபட்ச சில்லறை விலை 230 ரூபாவாகவும் குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தலின் படி, ஒரு கிலோகிராம் உள்நாட்டு கீரிசம்பாவின் மொத்த விலை 255 ரூபாவாகவும், அதிகபட்ச சில்லறை விலை 260 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிக்கும் வர்த்தமானி அறிவித்தலை நுகர்வோர் அதிகாரசபை வெளியிட்டுள்ளது.

# முன்னாள் CID அத்தியட்சகர் நெவில் சில்வாவுக்கு விளக்க மறியல் நீடிப்பு

**(ஏ.ஏ.எம்.பாயிஸ்)**

குற்றத் தடுப்பு பிரிவு முன்னாள் அத்தியசகர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி நெவில் சில்வாவை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு இரத்தினபுரி மாஜிஸ்திரேட் நீதவான் நேற்று (10) தீர்ப்பு வழங்கினார்.

இரத்தினபுரி பிரதேசத்தை சேர் த்த இரத்தினக்கல் வர்த்தகர் ஒருவரின் 1 கோடி 25 இலட்சம் ரூபா பெறுமதியான வேன் ஒன்றையும் பல இலட்சம் ரூபா பெறுமதியான இரத்தினக்கற்கள் பலவற்றையும் பலாத்காரமாக தன்வசம் வைத்திருந்து அதனை வேறு ஒரு நபருக்கு வழங்கியதாக செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கிணங்க இவர் கொழு ம்பில் சேவை செய்து வந்தகா ரியாலயத்தில் இவர் கடந்த 9 ஆம் திகதி கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வந்த நிலையில் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதைய டுத்து நீதவான் இத்தீர்ப்பினை வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ரயிலில் ஆபத்தான முறையில் பயணிக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கு எச்சரிக்கை

மலையக பிரதான ரயில்களில் பாதுகாப்பற்ற முறையில் பயணிக்கும் சுற்றுலாப்பயணிகளின்விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், கடுமையான பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

ரயில்வே துறையின் மூத்த அதிகாரி ஒருவர் இது தொடர்பில் கூறுகையில்,

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அடிக்கடி ரயிலின் கதவுகளுக்கு வெளியே சாய்ந்து, கைப்பிடிகளை பிடித்துக்கொண்டு, ஆபத்துகளை மறந்தே செல்ஃபி மற்றும் புகைப்படங்கள் எடுக்கின்றார்கள்.

சமீபத்தில், ஒஹிய மற்றும் இதல்கஸ்ஹின்ன அருகே செல்ஃபி எடுக்க முயன்ற ஈரானிய பெண் ஒரு சுரங்கப்பாதையில் மோதி தலையில் பலத்த காயம் அடைந்தார். அவர் நுவரெலியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் உள்ளார்.

எனவே இது தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ள ரயில்வே திணைக்களம் ரயில்களில் பாதுகாப்பற்ற முறையில் பயணிப்போருக்கு எச்சரிக்கை விடுக்கும் செயற்பாடுகளையும் விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி...

### கட்டுப்பாட்டு விலையில்...

அரிசி அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் அவதானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, காலி மாவட்டத்தில் ஒரு கிலோ சிவப்பு பச்சை அரிசி 260- 270 ஷரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுவது தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அரசாங்கம் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை அமுல்படுத்துவதற்கு முன்னர், சிவப்பு பச்சை அரிசி கிலோ ஒன்று 242 ஷரூபாய்க்கு அரிசி ஆலை உரிமையாளர்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட நிலையில் சில்லறை விற்பனைக் கடை உரிமையாளர்கள் சில சந்தர்ப்பங்களில் ஒரு கிலோ அரிசிக்கு 28 ஷரூபாய் அதிக இலாபத்துடன் வாடிக்கையாளருக்கு சிவப்பு அரிசியை விற்பனை செய்கின்றமை தெரியவந்துள்ளது.

உள்நாட்டு அரிசிக்கான அதிகபட்ச விலைகளை நிர்ணயம் செய்து வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (09) வெளியிடப்பட்டது.

நுகர்வோர் அதிகாரசபையால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி, ஒரு கிலோகிராம் பச்சை மற்றும் சிவப்பு பச்சை அரிசியின் அதிகபட்ச மொத்த விலை 215 ஷரூபாவாகவும், அதிகபட்ச சில்லறை விலை 220 ஷரூபாவாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு கிலோகிராம் உள்நாட்டு அரிசியின் மொத்த விலை 225 ஷரூபாவாகவும், அதிகபட்ச சில்லறை விலை 230 ஷரூபாவாகவும் குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தலின் படி, ஒரு கிலோகிராம் உள்நாட்டு கீரிசம்பாவின் மொத்த விலை 255 ஷரூபாவாகவும், அதிகபட்ச சில்லறை விலை 260 ஷரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட இந்த கட்டுப்பாட்டு விலை தொடர்பில் விற்பனையாளர்கள் பலரும் விசனம் தெரிவித்து வருகின்றனர்.

இதேவேளை, இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிக்கும் வர்த்தமானி அறிவித்தலை நுகர்வோர் அதிகாரசபை வெளியிட்டுள்ளது.

அதன்படி, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் பச்சை அரிசியின் அதிகபட்ச சில்லறை விலை 210 ஷரூபாவாகவும், இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் நாட்டரிசியின் அதிகபட்ச சில்லறை விலை 220 ஷரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் சம்பா அரிசியின் அதிகபட்ச சில்லறை விலை 230 ஷரூபாவாகவும் குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அரசாங்கத்தினால் வழங்கப்படும் அதிகபட்ச விலைக்கு மேல் அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்களை தேடி நேற்று (10) முதல் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் (09) வெள▯யிடப்பட்ட அரிசிக்கான அதிகபட்ச விலையை உள்ளடக்கிய வர்த்தமானி அறிவித்தலின் படி, இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அந்த அதிகார சபையின் தலைவர் ஹேமந்த சமரகோன் தெரிவித்தார்.

புதிய அரிசி விலை அறிவிக்கப்பட்டுள்ள பின்னணியில், அதற்கு மேலதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர்,

"எனவே, வர்த்தகசமூகம், உற்பத்தியாளர்கள், மொத்த விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர்களிடம் நாங்கள் அறிவித்த விலைக்கு ஏற்ப அரிசியை கொள்வனவு செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

முறைகேடாக அல்லது அதிகப்படியாக அரிசி விற்பனை நடந்தால், நுகர்வோர் ஆணையத்தின் 1977 என்ற எண்ணுக்கு அழைத்து முறைப்பாடு செய்யலாம்.

மேலும் நுகர்வோர் அதிகார சபையின் மாவட்ட அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்திலும் முறைப்பாடு செய்யலாம்." எனக் கூறியுள்ளார்.

லங்கா சதொசவில் ஏற்பட்டுள்ள அரிசி மற்றும் தேங்காய்க்கான தட்டுப்பாட்டை இன்னும் ஓரிரு நாட்களில் நிவர்த்தி செய்ய முடியும் என அதன் தலைவர் கலாநிதி சமித பெரேரா கூறியுள்ளார்.

சந்தையில் அரிசி மற்றும் தேங்காய்க்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதி அரிசி ஆலை உரிமையாளர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபடும் வரை அரிசி கிடைப்பது குறைவாகவே இருந்தது என கூறிய அவர், கலந்துரையாடலின் பின்னர் அரிசி வழங்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

### வங்கக்கடல் தாழமுக்கம்:

இதனால் தமிழகத்தின் கரையோர பகுதிகளிலும் இலங்கையின் வடக்கு,கிழக்கு கரையோர பகுதிகளிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக எதிர்வு கூறப்பட்டுள்ளது.

தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் பூமத்திய ரேகையை அண்மித்த, கிழக்கு இந்தியப் பெருங்கடல் பகுதியில் உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி, அதே இடத்தில் நிலவுகிறது. குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி, ஆழ்ந்த தாழ்வுப் பகுதியாக மாறுவதில் தொடர்ந்து தாமதம் நீடிக்கிறது. காற்றழுத்த தாழ்வுப் பகுதி வலுப்பெற மேலும் 24 மணி நேரம் எடுத்துக்கொள்ளும். இதையடுத்து, தமிழகம் மற்றும் இலங்கை கரையை நெருங்கலாம் என இந்திய வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது .

### சிலிண்டர் : தேசிய

புதிய ஜனநாயக முன்னணிக்கு கிடைக்கப்பெற்ற 02 தேசியப்பட்டியலில் ரவி கருணாநாயக்க முன்னதாக தெரிவு செய்யப்பட்டிருந்தார். இந்நிலையில், எஞ்சியுள்ள வெற்றிடத்திற்கு பைசர் முஸ்தபாவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டு தேர்தல் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### சபாநாயகர் அசோக

இதேவேளை, இது தொடர்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது ஊடகவியலாளர் எழுப்பட்ட கேள்விக்கும் சபைமுதல்வர் நளிந்த பண்டார நேற்று விளக்கமளித்திருந்தார்.

அதாவது, சபாநாயகர் அசோக ரன்வெல்லவின் கல்வி தகைமைகள் தொடர்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில், எதிர்வரும் சில தினங்களில் அவரே தெளிவான விளக்கமொன்றை முன்வைக்கவுள்ளார்.

அவரின் கல்வி தகைமை தொடர்பிலான உறுதிப்படுத்தல்களை வெளியிட்டதன் பின்னர், அவர் தொடர்பில் எடுக்கக் கூடிய நடவடிக்கைகளை அரசாங்கம் அறிவிக்குமென்று தெரிவித்தார்.

சபாநாயகர் அவரின் தகுதி தொடர்பில் அறிவித்ததன் பின்னர், அவரின் தகைமை தொடர்பில் வெளியிடப்படும் தகவல் உண்மை எனில் அதுதொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கை மற்றும் தகவல்கள் போலியெனில் அதுதொடர்பில் எடுக்கக்கூடிய நடவடிக்கை தொடர்பிலும் தீர்மானம் எடுக்கப்படும் என்று விளக்கமளித்தார்.

### ஜனாதிபதி அநுர

ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் அநுரகுமார திஸாநாயக்க மேற்கொள்ளும் முதலாவது உத்தியோகபூர்வ விஜயம் இதுவாகும்.

பூகோள அரசியலில் இலங்கை பாரிய சவால்களை நோக்கி நகர்த்திக் கொண்டிருக்கின்றது.

இந்தியா, அமெரிக்கா, சீனா ஆகிய மூன்று நாடுகளும் இலங்கையில் தமது பூகோள அரசியலை நேரடியாக தாக்கம் செலுத்தி வருகின்றன.

இந்த மூன்று நாடுகளும் இலங்கையை மையப்படுத்தி, தமது அரசியலை முன்னெடுத்து வருவதை இலங்கையின் அரசியல் வரலாற்றை உற்று நோக்கினால் அவதானிக்க முடியும்.

அதிகாரத்தில் அனுபவமில்லாத அநுரகுமார திஸ ாநாயக்கவின் தேசிய மக்கள் சக்தி இந்த சர்வதேச அரசியல் சவால்களை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றது என்பது தொடர்பில் தற்போது உள்நாட்டு எதிர்க்கட்சிகள் பலவும் உற்று நோக்கி வருகின்றன.

உள்நாட்டில் மாத்திரமன்றி சர்வதேச ரீதியிலும் புதிய ஜனாதிபதியின் செயற்பாடுகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டு வருகின்றன.

இதன்காரணமாகவே, ஜனாதிபதியின் கன்னி அமர்வு கொள்கை விளக்கவுரைக்கும் சர்வதேச ரீதியில் வரவேற்பு கிடைத்தது.

அதுமாத்திரமன்றி, ஜனாதிபதியின் பல திட்டங்களுக்கு சர்வதேச நாடுகள் பலவும் ஆதரவு தெரிவித்திருந்தன.

எவ்வாறாயினும், சீன அரசாங்கத்தின் கொள்கைகளில் அதிக ஆர்வமுள்ள ஜேவிபியின் முகத்தோற்றமான தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியுமான அநுரகுமார திஸ ாநாயக்கவின் இந்திய விஜயம் பல எதிர்ப்பார்ப்புகளுக்கு வித்திட்டுள்ளது.

### உதயங்க, கபில

ஸ்ரீலங்கன் விமான சேவையின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேன, எயார்பஸ் விமானங்களை சந்தை பெறுமதியை விட அதிக விலைக்கு கொள்வனவு செய்வதற்கு இலஞ்சம் பெற்றதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கை விமானப்படைக்கு மிக் விமானங்களை கொள்வனவு செய்யும் ஊழல் திட்டத்தை நடைமுறைப்படுத்திய குற்றச்சாட்டின் கீழ், ரஷ்ய முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவுக்கு எதிராக தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்க வெளியுறவுத்துறையின் 7031(உ) சரத்தின் கீழ், இவர்கள் இருவரின் பெயர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் இரு தரப்பின் பெயர்களும் பகிரங்கப்படுத்தப்பட்டு அவர்களுக்கு நாட்டிற்குள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது.

### வெள்ளத்தால் அறுவடை

வெள்ள நீரினால் நெற்காணிகள் ஆற்றுமண்ணால் மூடப்பட்டிருந்தால் அம்மண்ணை அகற்றுவதற்கு ஏக்கர் ஒன்றுக்கு 7500 ரூபா வீதமும் வழங்கப்படுமென காப்புறுதிச் சபையின் சுற்றுநிருபத்தில் கூறப்பட்டுள்ளது.

இதற்கமைய விவசாய விரிவாக்கல் சேவை நிலையங்களில் நஷ்டஈடு பெறுவதற்கான விண்ணப்பங்களை பெற்று பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு விவசாயிகள் கோரப்பட்டுள்ளனர்.

இதேவேளை வெள்ள நீரினால் ஓரளவு சேதமான நெல்வயல்களுக்கு இலவசமாக MOP பசளை வகைகளை ஏக்கருக்கு ஒரு அந்தர் வீதம் இலவசமாக கமநல சேவை திணைக்களம் வழங்கவுள்ளது.

உடைக்கப்பட்ட அணைக்கட்டுக்களையும், தடுப்புக்களையும் நீர்ப்பாசன திணைக்களம் திருத்தம் செய்யவுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் அறிவித்துள்ளது.

### இலங்கையில் சிறுவர்களிடையே

மூக்கில் அடைப்பு, ஒழுகுதல், தசை அல்லது உடல் வலி, குமட்டல், சோர்வு, பசியின்மை மற்றும் தொண்டைப் புண் ஆகிய அறிகுறிகள் தென்படும் என குழந்தைகள் நல மருத்துவரும் ஊடக ஒருங்கிணைப்பாளருமான மருத்துவர் மஹேஷ்க விஜயவர்தன அறிவுறுத்தியுள்ளார்.

இது ஒரு பருவகால நோயாகும். இது சில நேரங்களில் அதிகரிக்கும் சில நேரங்களில் குறையும்.

சில மாதங்களுக்கு முன்பு இதன் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. ஆனால், தற்போது எண்ணிக்கை குறையத் தொடங்கியுள்ளது.

இருப்பினும் முகக்கவசம் அணிவது, கைகளை முறையாகக் கழுவுதல் போன்ற சுகாதார நடைமுறைகளை பேணுவது ஆகியவை நோயை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க உதவும் என்று மருத்துவர் கூறியுள்ளார்.

கல்வி நிலையங்கள் மற்றும் குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களில் இப் பரவல் அதிகம் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

எனவே, பெற்றோர் தங்கள் குழந்தைகளின் உடல் நிலையை உன்னிப்பாகக் கண்காணித்து ஏதேனும் அறிகுறிகள் தென்பட்டால் அவர்களை கல்வி நிலையங்கள் அல்லது குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களுக்கு அனுப்புவதைத் தவிர்க்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என மருத்துவர் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் கொங்கோ ஜனநாயகக் குடியரசில் இதுபோன்ற காய்ச்சல் பரவி வருவதாக லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையின் குழந்தைகள் நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளதாக செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் பரவி வருவது பொதுவான வகை காய்ச்சல். ஆனால், கொங்கோவில் நிலைமை மிகவும் சிக்கலாக உள்ளது. மேலும் இப் பரவலுக்கான சரியான காரணம் அங்கு இன்னமும் கண்டறியப்படவில்லை.அத்துடன் கொங்கோ நாட்டில் பரவும் இந் நோய் இலங்கைக்கு வருவதற்கான சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவு எனவும் மக்களுக்கு உறுதியளித்துள்ளார்.

இது தொடர்பில் நாம் தற்போது பயப்படத் தேவையில்லை" எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கிழக்கு ஆளுநருடன் ஐ.ஓ.சி அதிகாரிகள் குழு சந்திப்பு



(எஸ்.கீதபொன்கலன்)

இந்திய எண்ணெய் நிறுவனத்தின்(ஐ.ஓ.சி) முகாமைத்துவப் பணிப்பாளர் தீபக்தாஸ் தலைமையிலான நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் குழு நேற்று(10) கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்தனசேகரவை,திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் சந்தித்தனர். மாகாணத்தின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் உட்கட்டுமான அபிவிருத்தி தொடர்பில் இரு தரப்பிற்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தின் அபிவிருத்திக்கான விடயங்கள் இங்கு ஆராயப்பட்டன. மாகாணத்தின் சுகாதாரப் பராமரிப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதுடன்,மாகாணத்தின் வைத்தியசாலைகளுக்குத் தேவையான இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் மற்றும் CT ஸ்கான் இயந்திரங்கள் தேவையாக உள்ளமை பற்றி ஆளுநரால் இங்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் ஐ.ஓ.சி. நிறுவனத்தின் கொழும்பிற்கான சிரேஷ்ட உதவித்தலைவர் அம்பர் அகமட்,பொறியியல் பிரிவிற்கான உதவித் தலைவர் சந்தீப் குப்தா, திருகோணமலைக்கான உதவித்தலைவர்களான பீ.கே. மண்டல் மற்றும் நவீன் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பாடசாலை சீருடை தேவையை முழுமையாக வழங்கிய சீனா

## சீன அரசுக்கு பிரதமர் நன்றி தெரிவிப்பு



2025 ஆம் ஆண்டிற்கான எமது நாட்டில் உள்ள அனைத்து பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களின் பிள்ளைகளுக்கு சீருடைகளை வழங்கியமைக்காக சீன அரசாங்கத்திற்கு இலங்கை அரசாங்கத்தின் சார்பில் நன்றி தெரிவிப்பதாக பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

2025ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடைகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

சீன அரசாங்கத்தின் உதவித்திட்டமாக கிடைக்கப்பெற்ற இந்த பாடசாலை சீருடைகளை சீனத் தூதுவர் Key Zheng Hong நேற்று (10) பிற்பகல் கொழும்பு துறைமுகத்தின் சர்வதேச கொள்கலன் முனையத்தில் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவிடம் கையளித்தார்.

2025 ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடைகளுக்காக 11,817 மில்லியன் மீற்றர் துணி தேவையாகவுள்ளதுடன், பாடசாலை சீருடைகள் வழங்கப்படவுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 46,40,086 ஆகும். அதன்படி, 2025 ஆம் ஆண்டிற்கான பாடசாலை சீருடைகளின் முழுத் தேவையும் (100%) சீன மக்கள் குடியரசால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

குறித்த சீருடை துணிகள் மூன்று தொகுதிகளாக இலங்கையை வந்தடையவுள்ளதுடன், முதலாவது மற்றும் இரண்டாவது தொகுதிகள் ஏற்கனவே இலங்கையை வந்தடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மூன்றாவது தொகுதி டிசம்பர் 25 ஆம் திகதி இலங்கையை வந்தடையவுள்ளது.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் கார்த்திகை மாதம் 26ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**மேஷம்:** இன்று கடினமான சூழ்நிலைகளை சந்திக்க நேரலாம்.

**ரிஷபம்:** இன்று நீங்கள் சௌகரியமாக உணர்வீர்கள்.

**மிதுனம்:** இன்று உங்கள் மனதில் தெளிவு காணப்படும்.

**கடகம்:** இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும்.

**சிம்மம்:** இன்று அதிருப்தியான நிலை காணப்படும்.

**கன்னி:** இன்று உங்களுக்கு சாதகமான நாள்.

**துலாம்:** இன்றைய நிகழ்வுகள் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

**விருட்சிகம்:** இன்று செயல்கள் சீராக நடக்க சாதகமாக இருக்காது.

**தனுசு:** இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. நீங்கள் சமநிலை இழப்பீர்கள்.

**மகரம்:** இன்றைய தினம் குறைந்த அளவே சாதகமாக காணப்படும்.

**கும்பம்:** இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது.

**மீனம்:** இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது. பதட்டமான சூழ்நிலை கவலை அளிக்கும்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** தசமி திதி அதிகாலை 01:13 AM அதன் பிறகு துவாதசி திதி.
**நட்சத்திரம்:** ரேவதி நட்சத்திரம் காலை 09:57 AM அதன் பிறகு அசுவினி நட்சத்திரம்.
**யோகம்:** மரண யோகம்.
**சந்திராஷ்டமம் நட்சத்திரம்:** பூரம்.
**சூலம்:** வடக்கு.
**இராகு காலம்:** மதியம் 12:00 PM முதல் 01:30 PM வரை,
**குளிகை:** காலை 10:30 AM முதல் 12:00 PM வரை,
**எமகண்டம்:** காலை 07:30 AM முதல் 09:00 AM வரை,

# கல்வி அமைச்சின் செலவு தொடர்பான கலந்துரையாடல்





2025 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவு திட்டத்தைத் தயாரிப்பதற்கான அமைச்சரவை மட்டத்திலான ஆரம்ப கலந்துரையாடல்கள் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன் ஓர் அங்கமாக கல்வி அமைச்சின் செலவுத் தலைப்பு தொடர்பிலான வரவு செலவு திட்ட யோசனைகள் குறித்த கலந்துரையாடல் நேற்று (10) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.


கல்வி, உயர்கல்வி, தொழில் கல்வி அமைச்சர் மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய,கல்வி, உயர்கல்வி, தொழில் கல்வி பிரதி அமைச்சர் வைத்தியர் மதுர செனவிரத்ன, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, கல்வி அமைச்சின் செயலாளர் நாலக்க கலுவெவ உட்பட அமைச்சுக்களின் அதிகாரிகள் பலர் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

# தத்தாத்ரேயர் தினத்தில் இலவச மூக்குக் கண்ணாடி சேவை

பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் 100வது ஆண்டு ஜனன தினம் 2025ஆம் ஆண்டில் இடம்பெறுவதை முன்னிட்டு ஒரு பூர்வாங்க நிகழ்வாக, பார்வை குறைந்த 100 பயனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கும் சேவை நடத்தப்பட உள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை பௌர்ணமி தினத்தன்று காலை 10.00 மணிக்கு கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி நிலையத்தில் இந்த நிகழ்வு இடம்பெறும். கொழும்பு புறக்கோட்டை 306-பி1 அரிமா சங்கத்தின் அனுசரணையுடன் இது நடைபெறவுள்ளது. அன்றைய தினம், தத்தாத்ரேயர் தினம் என்பதால், காலை 10.30. மணிக்கு திரிசூல அபிஷேகம், குருஸ்த்தான் புனித வேப்பமரத்துக்கான பூஜை என்பனவும், தொடர்ந்து பஜனையும், பகல் 12.00 மணிக்கு சீரடி சாயி ஆரத்தியும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய டிஜிட்டல் சாரதி அனுமதிப்பத்திரத்தை விரைவாக அறிமுகப்படுத்த நடவடிக்கை




தற்போது பயன்படுத்தப்படும் சாரதி அனுமதிப்பத்திரத்திற்குப் பதிலாக புதிய டிஜிட்டல் சாரதி அனுமதிப்பத்திரத்தை விரைவாக அறிமுகப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளர், சுகாதார மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் டொக்டர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (10) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும், டிஜிட்டல் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் வரை தற்போதுள்ள அனுமதிப்பத்திரம் வழங்கும் முறையை தொடர்ந்தும் செயல்படுத்த அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

தற்போது ஸ்மார்ட் அட்டை சாரதி அனுமதிப்பத்திர விநியோகம் ஆரம்பிக்கப்பட்டு கிட்டதட்ட 15 ஆண்டுகள் கடந்துள்ளதுடன், குறித்த நிறுவனங்களுக்கிடையேயான தரவுப் பரிமாற்ற வசதிகளை வழங்கி புதிய தொழிநுட்பத்திற்கமைய உலகில் பல நாடுகளில் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற டிஜிட்டல் சாரதி அனுமதிப்பத்திரத்தை வழங்குவது சிறந்ததென அரசு கண்டறிந்துள்ளது.

இதன்படி, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரின் ஆலோசனைகளைக் கருத்திற்கொண்டு இந்த டிஜிட்டல் சாரதி அனுமதிப்பத்திரம் விரைவில் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# அரச ஓய்வூதியம் பெறுவோர் தொடர்பான உறுதிப்படுத்தல்

## டிசம்பர் 15 முதல் பெப்ரவரி 15 வரை கால அவகாசம்

(முகம்மட் முக்தார்)

நாடளாவிய ரீதியில் உள்ள அரச ஓய்வூதிய தாரர்கள் 2025 ஆம் ஆண்டுக்கான உயிர்வாழ்தல் தொடர்பான உறுதிப்படுத்தலை டிசம்பர் 15 ம் திகதி முதல் 2025 பெப்ரவரி 15 ம் திகதி வரை மேற்கொள்ள வேண்டுமென ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் கேட்டுள்ளார் .

இதற்கமைய தாம் வாழும் பிரதேசத்தில் உள்ள கிராம சேவை அதிகாரியை சந்தித்து ஓய்வூதிய திணைக்களத்தினால் கிராம சேவகர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள படிவத்தில் ஒப்பமிடுவதன் மூலம் தாம் உயிர்வாழ்வதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். சுகயீனம் மற்றும் மாற்றுத்திறனாளிகளாக உள்ள ஓய்வூதியதாரர்கள் தொடர்பில் அவர்களது வீடுகளுக்கு கிராம சேவை அதிகாரிகள் சமுகமளித்து அவர்களது உயிர்வாழ்தல் தொடர்பான ஒப்பத்தைப் பெற்றுக்கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வெளிநாடுகளில் வாழும் ஓய்வூதியர்கள் ஓய்வூதிய திணைக்களத்தின் உத்தியோக இணையத்தளத்தில் உள்ள உயிர்வாழ்தல் தொடர்பான சான்றிதழைப் பூர்த்தி செய்து தாம் வாழும் நாட்டில் உள்ள இலங்கைத்தூதரக அதிகாரிகளிடம் கையளித்தல் வேண்டுமெனவும் ஓய்வூதிய திணைக்கள பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

இந்நடைமுறைகளைப் பின்பற்றாத ஓய்வூதிய தாரர்களின் 2025 ம் ஆண்டுக்கான ஓய்வூதிய கொடுப்பனவுகள் 2025 மார்ச் மாதம் முதல் நிறுத்தப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கிளப் வசந்த கொலைச் சம்பவம் 08 சந்தேகநபர்கள் விடுதலை



கிளப் வசந்த என்றழைக்கப்படும் சுரேந்திர வசந்த பெரேராவின் படுகொலைச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்கள் 8 பேரையும் பிணையில் விடுவிக்க ஹோமாகம மேல் நீதிமன்ற நீதிபதி மொஹமட் இர்ஷாதீன் நேற்று (10) உத்தரவிட்டார். ஒவ்வொருவருக்கும் ஒரு இலட்சம் ரூபா ரொக்கப் பிணையும் இரண்டு சரீரப் பிணைகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இந்த 08 சந்தேக நபர்களும் வெளிநாடு செல்வதற்குத் தடை விதித்தும், கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைத்து ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அத்துரிகிரிய பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடுமாறும் கடுமையான பிணை நிபந்தனைகளை விதித்து நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

கடந்த ஜூலை மாதம் 8ஆம் திகதி அத்துருகிரி பிரதேசத்தில் பச்சை குத்தும் நிலைய திறப்பு விழாவிற்கு வருகை தந்திருந்த சுரேந்திர வசந்த பெரேரா என்ற வர்த்தகரை சுட்டுக் கொன்ற சம்பவத்திற்கு உதவிய குற்றச்சாட்டின் பேரில் இந்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

# வெற் வரி காரணமாக புத்தக விற்பனையில் வீழ்ச்சி

புத்தகங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வெற் வரி காரணமாக புத்தக விற்பனை சுமார் 30% குறைவடைந்துள்ளதாக இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தின் செயலாளர் தினேஷ் குலதுங்க தெரிவித்துள்ளார். இதனால் புதிய புத்தகங்கள் வெளியிடுவது குறைந்துள்ளன, அதேவேளை சில அச்சகங்களை மூட வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. நன்றாக விற்பனையாகும் புத்தகங்களை மறுபதிப்பு செய்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது என்றார். சம்புத்த ஜெயந்தி மன்றத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 2024 ஜனவரிக்கு முன்பு இருந்ததைப் போல புத்தக வர்த்தக துறைக்கு விதிக்கப்பட்ட வெற் வரியை விலக்கு அளிக்க வேண்டும் என்று புத்தகப் பதிப்பாளர்கள் சங்கம் உள்ளிட்ட பல சங்கங்கள் இணைந்து இந்த கோரிக்கையை வைப்பதாகக் குறிப்பிட்டார். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முதலில் சமர்ப்பிக்க உள்ள வரவு செலவுத் திட்டத்தில் இக் கோரிக்கையை நிறைவேற்றுமாறு அரசாங்கத்திற்கு சங்கம் தெரிவித்துள்ளது.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5,Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

## நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே...!

அரசியல் சுய இலாபங்களுக்காகவும், பதவி ஆசை மற்றும் அதிகாரத் திமிர் ஆகிய காரணங்களுக்காகவும் இலங்கை அரசியல்வாதிகள் பலர் பலவிதமான நுட்பங்களை கையாண்ட வரலாறுகள் உண்டு. அவை வெளிப்படுத்தப்பட்ட வரலாறுகளும் உண்டு.

தேர்தல் மேடைகளில் மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்வதற்காக பல போலி வாக்குறுதிகள் வழங்கப்படுகின்றன. அவ்வாறு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல் இன்னும் நிலுவையில் உள்ளன.

2022 ஆம் ஆண்டு நாடு மீள எழ முடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருந்தது. மீண்டும் மீண்டும் ஞாபகமூட்ட தயங்கும் ஒரு கசப்பான இறந்தகாலம் இலங்கை மக்களுக்கு காணப்பட்டது.

பொருட்களின் விலையேற்றம், பணம் இருந்தும் பொருட்களை வாங்க முடியாத நிலை, வரிசை யுகம், உயிரிழப்புகள் எனப் பல நெருக்கடிகளையும் சிக்கல்களையும் நாடு எதிர்கொண்டிருந்தது.

அந்த சந்தர்ப்பத்தில் நாட்டுக்கு வருமானம் என்பது அவசியமாக இருந்தது உண்மைதான். எனினும், அது எந்தவகையிலாவது இருக்க வேண்டும் என மக்கள் கோரவுமில்லை அப்படியான ஒரு வருமானம் தேவையாக இருக்கவும் இல்லை.

அரசியல் அடிப்படையில் மதுபான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போதைய அரசாங்கம் முன்வைத்த குற்றச்சாட்டுக்கு பதிலடி கொடுத்துள்ளார்.

வங்குரோத்து நிலையிலிருந்த நாட்டை மீள கட்டியெழுப்பவே இந்த வழிமுறை கையாளப்பட்டதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை சரியான ஒரு விளக்கமாக ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது. தனது சுய அரசியல் இலாபங்களுக்காக மதுபான அனுமதிப்பத்திரங்களை வழங்கி விட்டு அந்த உண்மை வெளிவந்தவுடன் அதற்கு சிறுகுழந்தைப் போல சாக்குபோக்கு கூறும் அரசியல் ஜாம்பவான் இன்னும் சற்று சிந்தித்து பொருத்தமான ஒரு விளக்கத்தை வழங்கியிருக்கலாம்.

புதிய அரசாங்கம் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களை சட்டத்தின் முன்நிறுத்துவதாக மக்களுக்கு வழங்கிய வாக்குறுதி தொடர்பில் அவதானம் செலுத்த ஆரம்பித்துள்ளமை வரவேற்கத்தக்கது. எனினும், அதற்கான சட்ட நடவடிக்கையும் வெகு விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும். அப்போது தான் இவ்விடயம் முழுமையடையும்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்காலப்பகுதியில் 361 மதுபான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் கடந்த நாடாளுமன்ற அமர்வின் போது சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க வெளிப்படுத்தியிருந்தார்.

அதன்படி கிளிநொச்சி மாவட்டத்திலேயே அதிகளவான மதுபான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. இந்த சர்ச்சை தொடர்பிலேயே ரணில் விக்கிரமசிங்க பதிலளித்திருந்தார்.

எனினும், ரணில் வழங்கிய இந்த பதில் மக்களுக்கு திருப்திகரமானதாக இல்லை. நாட்டுக்கு வருவாய் வேண்டும் என்பது நியாயமான ஒன்றாக இருந்தாலும், அதற்காக எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற உரிமை யாராலும் யாருக்கும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

ஆக, ரணிலின் இந்த பதில் பல கேள்விகளை எழுப்புகிறது. மதுபான அனுமதி பத்திரங்களை அரசியல் அடிப்படையில் வழங்கவில்லை எனக் கூறுகிறீர்கள், அப்படியானால் அரசியல்வாதிகளுக்கு ஏன் வழங்கினீர்கள் என்ற கேள்வி எழுகின்றதல்லவா?

மக்களை குடி போதைக்கு ஆளாக்கி அடிமையாக்கி நாட்டுக்கு கிடைக்கும் வருவாய் எதற்கு? அதனால் பயன் பெறுபவர்கள் யார்? இவ்வாறு வழங்கப்பட்ட மதுபான அனுமதிப் பத்திரங்களால் நாட்டுக்கு தான் வருவாய் என கூறுகிறீர்களே, அப்படியெனில் இந்த விடயம் தொடர்பில் ஏன் நாடாளுமன்றத்திலோ, மக்களுக்கு உரையாற்றும் போதோ அல்லது எந்தவொரு தேர்தல் மேடையிலோ பகிரங்கமாக அறிவிக்கவில்லை? இந்த கேள்விகளுக்கு நிச்சயம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதிலளிக்க கடமைப்பட்டுள்ளார்.

யார் வேண்டுமானாலும், என்ன வேண்டுமானாலும் செய்து விட்டு அதற்கு பின்னர் கூறும் சிறுபிள்ளைத்தனமான காரணங்களை கேட்டுக் கொண்டு பேசாமல் இருக்க மக்கள் இன்னும் முட்டாள்கள் அல்ல.

புதிய மாற்றமொன்றை நோக்கி புதிய அரசியல் மறுமலர்ச்சிக்காக மக்கள் அனைவரும் ஒன்று திரண்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் மறுபடியும் அவர்களை முட்டாள்களாக்க முயற்சித்தால் அதன் விளைவும் ரணிலையே சாரும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை பயன்படுத்தி அதி உட்சபட்ச மோசடியில் ஈடுபட்டுள்ளமை இதன் மூலம் தற்போது வெளியாகியுள்ளது. நிச்சயம் அநுர அரசாங்கம் இதற்கு சட்டரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை முறைகேடாக பயன்படுத்தி மேற்கொண்ட மோசமான ஒரு செயலாக இவ்விடயம் பார்க்கப்படுகிறது.

தேர்தல் பிரசாரங்களின் போது இளைஞர்களுக்கான எதிர்காலம் இயலும் ஸ்ரீலங்கா என்று மார்தட்டியவர், இளைஞர்களுக்கு மதுபானசாலைகளை தான் மிச்சம் வைத்துள்ளார்.

அரசாங்க வருமானத்திற்காகவே மதுபான அனுமதிப்பத்திரங்களை வழங்கினேன் எனக் கூறுவதில் என்ன பெருமை உள்ளது.

புதிய ஜனாதிபதியாக அநுரகுமார பதவியேற்பார் எனத் தீர்மானிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில், " நான் அன்பு வைத்துள்ள இலங்கை எனும் பாசம் மிகுந்த குழந்தையினை உங்களிடம் ஒப்படைக்கிறேன்" என வாழ்த்து தெரிவித்திருந்தார் ரணில் விக்கிரமசிங்க.

எந்த தந்தை தன்னுடைய குழந்தை தீய வழியில் செல்வதை விரும்புவார்? இது ஒரு தேசத்துரோகச்செயல். செய்த குற்றத்தை மறைக்க எத்தனை விளக்கங்கள் வழங்கினாலும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே!

# ஐக்கிய மக்கள் சக்தி தேசியப் பட்டியலில் வர்த்தகர்களும் உள்ளடக்கம்....?

நாடாளுமன்றத்தில் 159 ஆசனங்களுடன் பலமான அரசாங்கமாக தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்துள்ளது.

எனினும், வெறுமனே 35 ஆசனங்கள் தேசியப் பட்டியலுடன் 40 ஆசனங்களை வென்ற எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியால் தேசியப் பட்டியல் சர்ச்சையை இன்னமும் தீர்க்க முடியாத ஒரு சூழல் ஏற்பட்டுள்ளது.

அதன்படி, இன்னும் நால்வர் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியலில் நியமிக்கப்பட வேண்டும்.

கூட்டணியாக இணைந்து போட்டியிட்ட பல கட்சிகளுக்கு வழங்கிய வாக்குறுதிகளின்படி, ஆசனங்களை பகிர்ந்தளிக்க முடியாமையே கட்சிக்குள் தேசியப் பட்டியல் சர்ச்சை ஏற்பட காரணம் என அக்கட்சியின் உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

இந்நிலையில், தேசியப்பட்டியல் தொடர்பில் இன்னும் கட்சிக்குள் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாகவும் அந்த கலந்துரையாடல்களில் தாம் தொடர்புபடவில்லை எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் ஆசனங்களுக்காக அநேகமானோர் பலர் வரிசையில் காத்திருப்பதாகவும் நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்தவர்கள் கூட தேசியப்பட்டியல் ஆசனங்களை கோரியுள்ளதாகவும் ஹர்ஷ டி சில்வா வெளிப்படுத்தியுள்ளார்.

தேசியப் பட்டியல் ஆசனங்களை யாருக்கு வழங்க வேண்டும் என்பது தொடர்பில் கட்சியே தீர்மானிக்க வேண்டும் எனக்கூறிய அவர், அது தொடர்பில் கட்சி இன்னுமும் தீர்க்கமான முடிவை எடுக்கவில்லை எனவும் கூறியுள்ளார்.

தேசியப் பட்டியல் ஆசனங்கள் தொடர்பிலான கலந்துரையாடல்களில் தாம் தொடர்புபடவில்லை என்பதால் இது தொடர்பான சரியான பதிலை தன்னால் வழங்க முடியாது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

சிங்கள ஊடகமொன்றில் இடம்பெற்ற அரசியல் நிக்வொன்றில் கலந்துக்கொண்டு பதிலளிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் ஆசனங்களை நியமிப்பதில் ஏன் இவ்வளவு தாமதம் என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் விதத்தில் ஹர்ஷ டி சில்வா இவ்விடயங்களை வெளிப்படுத்தியிருந்தார்.

இதேவேளை, நிவ் ரத்ன அரிசி ஆலை உரிமையாளர் லங்கேஸ்வர மித்ரபாலவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் ஆசனமொன்றை கோரியுள்ளமை தொடர்பில் வெளியாகியுள்ளது.

நிவ் ரத்ன அரிசி ஆலை உரிமையாளர் லங்கேஸ்வர மித்ரபால , நடைபெற்று நிறைவடைந்த ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சக்திக்கு நிதி வழங்கியுள்ளாரா என குறித்த அரசியல் நிகழ்வில் ஹர்ஷ டி சில்வாவிடம் கேள்வியெழுப்பப்பட்டது.

அதன்போது, அந்த விடயம் தொடர்பில் தனக்கு எதுவித தகவலும் தெரியாது எனவும், தேர்தலின் போது மேற்கொள்ளப்பட்ட நிதி நடவடிக்கைகள் கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தும் கட்சியின் பொதுச்செயலாளர் மூலமே மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் பதிலளித்துள்ளார்.

ரத்ன அரிசி உரிமையாளர் தேசியப்பட்டியலில் உள்ளார் என்பது கூட எனக்கு ஆரம்பத்தில் தெரியாது அவர் நிதி வழங்கினாரா என்பது தொடர்பிலும் எனக்கும் தெரியாது எனவும் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பணத்தை வாங்கிவிட்டு தேசியப் பட்டியலில் இணைக்கும் பழக்கம் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

எவ்வாறாயினும், குறித்த கேள்விக்கு பதிலளிக்கும் போது , கேள்வியை தவிர்க்கும் தொனியிலேயெ அவர் பதிலளித்திருந்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக பார்க்கப்பட்டாலும் பலமான ஒரு எதிர்க்கட்சியாக இன்னும் தனது சேவையை ஆரம்பிக்கவில்லை.

நாடாளுமன்றத் தேர்தல் நிறைவடைந்து நாடாளுமன்ற அமர்வுகள் இடம்பெற்று நிறைவடைந்திருந்தாலும் கூட இன்னமும் தேசியப் பட்டியல் ஆசனங்கள் கூட உரிய முறையில் நியமிக்கப்படவில்லை.

ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் இணைந்த பல கட்சித் தலைவர்களும் தத்தமது தேசிய பட்டியல் ஆசனங்களில் உறுதியாக உள்ள நிலையில் தற்போது நிதி வழங்கியுள்ள பல வர்த்தகர்கள் தேசியப் பட்டியலைக் கோருவதாகவும் செய்திகள் வெளியாகி வருகின்றன.

இதன் உண்மைத் தன்மை எதுவாக இருந்தாலும், ஐக்கிய மக்கள் சக்தியோ, கூட்டணியோ நாடாளுமன்றில் தமது கடமையை சரிவர செய்ய வேண்டும்.

அதற்கு அறிவுள்ள புத்திசாலியானவர்களை நாடாளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்.

கட்சித் தலைவராக ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைவர் சஜித் பிரேமதாச இதை விடவும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

செல்லும் இடமெல்லாம் ஜனம்பெப் தொடர்பிலும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் குறைகளை மாத்திரம் காணும் சஜித் பிரேமதாச தனது கட்சிக்குள் எழுந்துள்ள சர்ச்சைகள் தொடர்பிலும் சற்று அவதானம் செலுத்துவது சிறந்தது.

ஐக்கிய மக்கள் சக்தி என நாடாளுமன்ற தேர்தலில் இணைந்து போட்டியிட்ட அரசியல் கட்சிகளுக்கு வாக்குறுதி வழங்கியபடி, தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை வழங்கவில்லையெனின், குறித்த கட்சிகள் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தனித்து போட்டியிடுவது தொடர்பில் அக்கட்சிகள் அவதானம் செலுத்தியுள்ளமை தெரியவந்துள்ளது.

ஐக்கிய மக்கள் கூட்டணியாக சுதந்திர மக்கள் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட சில கட்சிகள் செயற்படுகின்றன.

ஐக்கிய மக்கள் கூட்டணியில் தேசியப் பட்டியலில் மூன்றிலிருந்து ஐந்தாம் இடம் வரையில் சுதந்திர மக்கள் காங்கிரஸின் டலஸ் அழகப்பெரும, தமிழ் முற்போக்கு கூட்டணியின் சாகரன் விஜயேந்திரன் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிஷாம் காரியப்பர் ஆகிய வேட்பாளர்களாவர்.


அந்த பட்டியலில் முதல் இரண்டு வேட்பாளர்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் இம்தியாஸ் பக்கீர் மார்க்கர் ஆவர்.

இதற்கு முன்னர் இடம்பெற்ற நாடாளுமன்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியாக போட்டியிட்ட நிலையில் அந்த சந்தர்ப்பத்தில் வாக்குறுதியளித்த படி ஏனைய கட்சிகளுக்கு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை வழங்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.





> தேசியப் பட்டியல் ஆசனங்கள் தொடர்பிலான கலந்துரையாடல்களில் தாம் தொடர்புபடவில்லை என்பதால் இது தொடர்பான சரியான பதிலை தன்னால் வழங்க முடியாது என அவர் வலியுறுத்தியுள்ளார்



# முல்லைத்தீவில் மாபெரும் மீனவர் போராட்டம்







(பு.கஜிந்தன்)

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் மாபெரும் மீனவர் போராட்டம் முல்லைத்தீவு நகரில் நேற்று நடைபெற்றது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருந்துள்ள சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் தமக்கு ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கு அரசு தீர்வு தர வேண்டும் என்று கோரியே போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் தலைவர் ஹேர்மன் குமார, நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் உட்பட பல்வேறு தரப்பினர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

# ஒரு கோடி ரூபா பண மோசடி: வவுனியாவில் ஒருவர் கைது

(கி.வசந்தன்)

கனடா அனுப்புவதாக கூறி 1 கோடி 10 இலட்சம் ரூபாய் பணத்தை 16 பேரிடம் பெற்று மோசடி செய்ததாக இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிசார் தெரிவித்தனர்.

வட மாகாணத்தின் வவுனியா, மன்னார், மாங்குளம், கிளிநொச்சி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வசித்து வந்தவர்களிடம் நபர் ஒருவர் கனடாவில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றிற்கு வேலைக்கு அனுப்புவதாக, முதல் கட்டமாக ஒரு தொகைப் பணத்தை தருமாறும், மிகுதிப் பணத்தை கனடா சென்று வேலை செய்து கொடுக்கலாம் எனவும் கூறி பலரிடம் பணம் பெற்றுள்ளார். குறிப்பாக ஒவ்வொருவரிடமும் 5 இலட்சம் தொடக்கம் 10 இலட்சம் ரூபாய் வரை பணம் பெறப்பட்டுள்ளது. இது தொடர்பில் பாதிக்கப்பட்ட 16 பேர் வவுனியா பொலிசில் செய்த முறைப்பாட்டுக்கமைய இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் 16 பேரிடமும் சிறு தொகையாக பெற்று 1 கோடி 10 இலட்சம் ரூபா மோசடி செய்துள்ளார். சந்தேக நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் எனவும் பொலிசார் தெரிவித்தனர்.

# அனுமதிப்பத்திரத்திற்கு முரணான கட்டிட அமைப்பு

## வவுனியா நகர சபையால் எச்சரிக்கை

(கி.வசந்தன்)



வவுனியா புதிய பஸ் நிலையத்திற்கு முன்பாக உள்ள பிரபல பீசா விற்பனை நிலையம் அமைந்துள்ள கட்டிடம், அனுமதி பத்திரத்திற்கு முரணாக அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து கட்டிடத்தின் உரிமையாளருக்கு எதிராக வவுனியா நகரசபையால் எச்சரிக்கை நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளது.

குறித்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நகரசபை கட்டளைச் சட்டங்களின் பிரகாரமும், நகரப்பகுதிக்குள் முன்னெடுக்கப்படும் கட்டிடங்களின் அபிவிருத்தி தொடர்பாகவும் வவுனியா நகரசபையிடம் முறையான அனுமதி பெற்றிருக்கப்பட வேண்டும்.

எனினும் குறித்த ஆதனத்தில் நகரசபையால் கடந்த 2022 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட அனுமதிக்கு முரணாக கட்டிடம் அமைக்கப்பட்டு வணிக ரீதியிலான நோக்கத்தில் இக் கட்டிடம் இயங்குவதனால் அது தொடர்பாக குறிப்பிட்ட சில ஆவணங்களை நகரசபைக்கு சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டிருந்தது.

அந்த வகையில் திருத்திய வரைபடத்திற்கான கட்டிட அனுமதி, அனுமதிக்கப்பட்ட வரைபடத்திற்கான குடிபுகு சான்றிதழ், சுற்றுச் சூழல் உரிமம், வியாபார உரிமம் ஆகியவற்றை 14 நாட்களுக்குள் சமர்ப்பிக்குமாறு சபையால் கோரப்பட்டிருந்தது. எனினும் அது சமர்ப்பிக்கப்படாத நிலையில் மீளவும் 7 நாட்களுக்குள் அந்த ஆவணங்களை வழங்குமாறு கடந்த 5ஆம் திகதி சபையின் செயலாளரால் நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளது.

குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படத் தவறின் நகர அபிவிருத்தி அதிகார சபையின் திருத்தச் சட்டங்களின் பிரிவுகளை மீறி நகரசபையின் அனுமதி பத்திரத்திற்கு முரணாக கட்டிடம் அமைத்து செயற்படுவதாக கருதி நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவித்தல் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காரைநகர் படகு கட்டும் நிலையத்தை மீள்கட்டமைப்பு செய்ய அங்கீகாரம்

காரைநகர் சீனோர் படகு தயாரிப்பு நிலையத்தை மீள்கட்டமைப்பு செய்வதற்கு இந்திய அரசு உடன்பாடு தெரிவித்துள்ளது.

அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக அமைச்சரவையும் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றத்திற்குரிய காரைநகர் படகு தயாரிப்பு நிலையத்தின் மீள்கட்டமைப்புக்காக நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்தல், தேவையான இயந்திர உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் பெறுகை செய்தல் போன்றவற்றுக்காக நிதியொதுக்கீடுகளை வழங்குவதற்கு இந்திய அரசு உடன்பாடு தெரிவித்துள்ளதுடன், அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக 2024.10.21 அன்று அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இதுவரை கையொப்பமிடப்படாதிருப்பதுடன், மீன்பிடி, நீரியல்வள மற்றும் சமுத்திர வளங்கள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனையைக் கருத்தில் கொண்டு, இருதரப்புக்கும் இடையிலான ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கும், உத்தேச நிதி வழங்கலுக்கும் புதிய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# தீயில் எரிந்த நிலையில் பெண்ணின் சடலம் மீட்பு

நெல்லியடியில் பெண் ஒருவர் தீயில் எரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நெல்லியடி கரணவாய் பகுதியில் நேற்று முன்தினம் மாலை

இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் சங்கரன் தோட்டம் கரணவாய் தெற்கைச் சேர்ந்த சிவகுரு சிவபூங்கா (வயது 48) என்ற திருமணமாகாத பெண்ணே உயிரிழந்துள்ளார்.

இவர் இரண்டு சகோதரிகளுடன் வீட்டில் வசித்து வந்துள்ள நிலையில், வீட்டுக்கு அருகாமையில் உள்ள பனங்காணி ஒன்றில் தீயில் எரிந்த நிலையில் சடலமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகளை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## வன்னி தேர்தல் மாவட்டத்தில்

# 338 பேர் செலவு அறிக்கை சமர்ப்பிப்பு

வன்னி தேர்தல் மாவட்டத்தில் இதுவரை 338 பேர் தமது தேர்தல் செலவு அறிக்கையை சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள், தங்களது தேர்தல் செலவு அறிக்கையை கடந்த 6ஆம் திகதி நள்ளிரவுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தது. வன்னி தேர்தல் மாவட்டத்தில் இதுவரை 14 அரசியல் கட்சிகள் மற்றும் 20 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் உட்பட 338 பேர் தமது தேர்தல் செலவு அறிக்கையை சமர்ப்பித்துள்ளதாக மாவட்ட செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வன்னி தேர்தல் மாவட்டத்தில் 23 அரசியல் கட்சிகளும் 25 சுயேச்சைக் குழுக்கள் என மொத்தமாக 48 தரப்புகளைச் சேர்ந்த 432 பேரின் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. அவற்றில் 5 சுயேச்சைக் குழுக்களினதும் 9 அரசியல் கட்சிகளையும் சேர்ந்த 14 பேரில் செலவு அறிக்கை இதுவரை கிடைக்கப்பெறவில்லை. இதேவேளை, சில தரப்புகள் பதிவுத்தபாலில் செலவு அறிக்கையை அனுப்பி வைத்துள்ள நிலையில் அவை கிடைக்கப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# சிவாஜிலிங்கம் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதி

தமிழ்த் தேசிய கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் திடீர் சுகயீனமுற்ற நிலையில் சுயநினைவற்று கொழும்பு - கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்த் தேசிய கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கம் தனிப்பட்ட விஜயமாக கொழும்பிற்கு சென்றுள்ளார்.

இந்நிலையில் வழக்கமான உடல் பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு சென்று கொண்டிருந்த போது வைத்தியசாலையை அண்மித்த நிலையில் திடீரென உடல் நிலை பாதிப்பிற்குள்ளாகியுள்ளது.

இதையடுத்து அவர் உடனடியாக கொள்ளுப்பிட்டி டேடன்ஸ் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

கடந்த இரண்டு நாட்களாக சுயநினைவற்ற நிலையில் உள்ள அவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் செயற்கை சுவாச கருவியின் உதவியுடன் சிகிச்சை பெற்று வருகிறார்.

# "தமிழ் அறிவு" நூல் வெளியீடு







(பு.கஜிந்தன்)

காவேரி கலா மன்றம் - தாய்நிலம் பதிப்பகம் இணைந்து நடாத்திய, மறைந்த கவிஞர் க.பே. முத்தையா எழுதிய "தமிழ் அறிவு" நூல் வெளியீட்டு விழா நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது.

மறைந்த கவிஞர் க.பே.முத்தையா எழுதிய ஏழாவது படைப்பாக இந்த நூல் அமைந்துள்ளது. பேராசிரியர் எஸ்.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நினைவுப் பேருரையை முனைவர் மனோன்மணி சண்முகதாஸும், நூலின் ஆய்வுரையை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் கவிஞர் த.ஜெயசீலனும் நிகழ்த்தினர். நூலின் முதற் பிரதியை பேராசிரியர் ரட்ணஜீவன் எச்.ஹூல் வழங்கி வைக்க பேராசிரியர் அ.சண்முகதாஸ் பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் காவேரி கலா மன்றத்தினர், தமிழ் அறிஞர்கள், மாணவர்கள், கல்விமான்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## கொடிகாமத்தில்

# குடும்பஸ்தர் திடீர் மரணம்

கொடிகாமம் பொலிஸ் பிரிவில் வரணிப் பகுதியில் காய்ச்சலால் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். வரணி வடக்கு, வரணியைச் சேர்ந்த கோகிலான் தவராசா (வயது 60) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார். கடந்த 3 ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டு மூச்சு விட முடியாத நிலையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை (08) பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் (09) நண்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# முன்னாள் அமைச்சர் வழங்கிய வலைகளை விநியோகிக்க கோரிக்கை



முன்னாள் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ். மாவட்ட மீனவர்களுக்கு வழங்குவதற்காக வலைகள் எடுத்து வரப்பட்ட நிலையில் மீனவர்களுக்கு அவை வழங்கப்படவில்லை என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனத் தலைவர் அந்தோணிப் பிள்ளை மரியதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு சமாசத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்துரையாற்றிய அவர் இவ் விடயம் தொடர்பில் புதிய கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகரனுக்கு தெரிவித்த நிலையிலும் இதுவரை மீனவர்களுக்கு வழங்கப் படவில்லை.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் கடை தொழில் அமைச்சர் உரிய கவனம் எடுத்து தேங்கி கிடக்கும் வலைகளை மீனவர்களுக்கு வழங்குவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

ஆகவே எமது மீனவர்களின் நீண்டகால பிரச்சினையான இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய பிரச்சினை இந்திய பிரதமருடனும் ஜனாதிபதியுடனும் பேசி எமது ஜனாதிபதி அநுர தீர்த்து வைப்பார் என நம்புகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.











# அமைதி காக்கும் பணிகளுக்கு ஆபிரிக்கா புறப்படும் இலங்கை வீரர்கள்

மத்திய ஆபிரிக்க குடியரசில் அமைதி காக்கும் பணிகளுக்காக இலங்கை விமானப்படை இலங்கையிலிருந்து புறப்பட்டது.

மத்திய ஆபிரிக்க குடியரசில் ஐ.நா அமைதி காக்கும் பணிகளுக்காக இலங்கை விமானப்படையின் ஹெலிகொப்டர் படையணியைச் சேர்ந்த 108 பேர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து மத்திய ஆபிரிக்க குடியரசை நோக்கிப் புறப்பட்டனர்.

இலங்கை விமானப்படை 2014 ஆம் ஆண்டு முதல் அமைதி காக்கும் நடவடிக்கைகளில் தீவிரமாகப் பங்களித்துள்ளதுடன், இலங்கை விமானப்படை ஹெலிகொப்டர் படைப்பிரிவின் குழுவினர் அமைதி காக்கும் பணிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். படைவீரர்களுக்கான போக்குவரத்து, விஜபி போக்குவரத்து, உணவு மற்றும் பொருட்கள் போக்குவரத்து, உள்நாட்டு விமான பயணங்கள் , பாரசூட் மூலம் சரக்குகளை இறக்குதல், மருத்துவக் குழு போக்குவரத்து உள்ளிட்ட பல சிறப்புப் பணிகளுக்கு தங்களது பங்களிப்பை இக்குழுவினர் வழங்கிவருகின்றனர்.

மேலும் இதற்கு முன்னர் மத்திய ஆபிரிக்க குடியரசில் ஐ.நா அமைதி காக்கும் பணிகளுக்காகப் பயணம் செய்த 92 பேர் அடங்கிய விமானப்படை குழுவினர் அவர்களின் சேவை காலம் நிறைவடைந்ததன் பின்பு மீண்டும் நாட்டை வந்தடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. இதன்போது சர்வதேச விமான நிலையத்தில் அனுப்பிவைப்பதற்கும் வரவேற்றப்பதற்கும் விமானப்படை அதிகாரிகள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் வருகை தந்திருந்தனர்.

# தமிழரசு கட்சிக்கு யாரும் நிபந்தனை விதிக்க முடியாது

## ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் கருத்து ஏற்கமுடியாது: ஞா. சிறிநேசன் எம். பி

தமிழரசு கட்சி ஒரே ஒரு கட்சியாக செயற்பட்டு 8 ஆசனங்களை பெற்றுள்ளது. எனவே,7 கட்சியுடன் 8 வது கட்சியாக தமிழரசு கட்சியினை இணைத்துக் கொள்ளவேண்டும் என்ற ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் கருத்து ஏற்கமுடியாது. 7 கட்சிகளாக செயற்பட்டிருந்து கூட ஒரு ஆசனத்தை மட்டுமே அவர்கள் கைப்பற்றியுள்ளனர். எனவே, கட்சிகளின் எண்ணிக்கை முக்கியமானது அல்ல, கட்சிகளுக்கு கிடைக்கப் பெறுகின்ற வாக்குபலம்தான் முக்கியமானது. விடாகண்டம் குடாகண்டமாக இல்லாமல்,சரியாக சிந்திக்க வேண்டுமென தமிழரசு கட்சி ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஞா. சிறிநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நடந்த ஊடக சந்திப்பு ஒன்றில் கருத்து தெரிவித்த அவர்,

தமிழரசு கட்சி ஒற்றுமையை விரும்புகின்ற கட்சி. கடந்த காலத்தில் உள்ளூராட்சி சபை தேர்தலில் நாங்கள் பிரிந்து செயற்படுகின்றோம் என்ற விடையத்தை சொல்லியிருந்தோம். மாகாணசபை மற்றும் பாராளுமன்ற தேர்தலில் இணைந்து செயற்படுவோம் என்ற கருத்தை தெரிவித்திருந்தோம். ஆனால், அவர்கள் தமது அவசரம் காரணமாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி ஒன்றை உருவாக்கி நாங்கள் 7 கட்சிகள் ஒன்றாகிவிட்டோம். நீங்கள் ஒரு கட்சியாக இருக்கின்றதால் நீங்கள் எங்களுடன் வந்து இணையுங்கள் என நிபந்தனைகளை விதித்தனர்.

இதன்போது, நாங்கள் அப்படி அல்லாமல் தமிழ் தேசிய கூட்டமைப்பாக இணைந்து செயற்படலாம் என கருத்து சொன்னபோதும், அவர்கள் இல்லை: நாங்கள் 7 கட்சிகள் இருக்கின்றோம். எனவே, 7 கட்சிகளுடன் ஒரு கட்சிதான் வந்து இணையவேண்டும் என கருத்தை முன்வைத்திருந்தனர்.

உண்மையில், தேர்தல் முடிவு காட்டுவது என்னவென்றால், 7 கட்சிகளாக செயற்பட்டிருந்த தால் கூட அவர்களால் ஒரு ஆசனத்தை கைப்பற்ற முடிந்திருக்கின்றது. ஆனால்,ஒரே ஒரு கட்சியாக செயற்பட்டிருந்த தமிழரசு கட்சி 8 ஆசனங்களை பெற்றுள்ளது. ஆகவே, கட்சிகளின் எண்ணிக்கை முக்கியமானது அல்ல. கட்சிகளுக்கு கிடைக்கப் பெறுகின்ற வாக்குபலம்தான் முக்கியமானது. அந்தடிப்படையில் அவர்கள் இந்த விடயத்தை தெளிவாக உணர்ந்திருப்பார்கள்.

இனிவரும் காலங்களில் எமது கட்சி கூடி தெளிவான ஒரு முடிவெடுக்கும்.அந்த முடிவை அறிவிப்பேன்.அதேவேளை, நிபந்தனைகள் விதிப்பது, 7 கட்சியுடன் 8 வது கட்சியாக இணைத்துக் கொள்ளவேண்டும் என்ற கருத்து ஏற்றுக் கொள்ளமுடியாது .வாக்கு பலத்தின் அடிப்படையில் எந்த கட்சியோடு எந்த கட்சி இணையவேண்டும் என சிந்திக்கவேண்டும்.

அதேவேளை, சிவஞானம் சிறீதரன் தலைமையில் 8 பேர் சென்று ஜனாதிபதியை சந்தித்தோம். அதன்போது தேசிய இனப்பிரச்சி னையின் தீர்வினை நியாயமான அடிப்படையில் தீர்வை தரவேண்டும். காணிகள் விடுவிப்பு,அதாவது பலதரப்பட்ட காணிகள் இராணுவத்தினராலும் குடியேறிகளாலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாகவும் அதில் மட்டக்களப்பு மயிலத்தமடு





மாதவனை மேய்ச்சல்தரை காணி, நீதிமன்ற தடையையும் மீறி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு வருகிறது.அதனால், 5 இலட்சம் கால்நடைகள் மேய்ச்சல் தரை இல்லாததால் பாதிக்கப்பட்டுள்ளது என தெரிவித்தோம்.

அத்துட ன் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கவேண்டும். அதனால், நீண்டகாலமாக அரசியல் கைதிகளாக இருக்கும் அப்பாவி கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும் எனவும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பிரச்சினை தொடர்பாகவும் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் முழுமையாக்கி தரவேண்டும். அதேவேளை, திருக்கோவில் ஆதார வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பாக பல தரப்பட்ட பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன.

இதனைவிட வடக்கு,கிழக்கில் அபிவிருத்தி விடயத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு பின்தள்ளப்பட்டிருக்கின்ற பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்படவில்லை எனவும்,அந்த அபிவிருத்தி விடையத்தில் ஆளும்கட்சி எதிர்கட்சி என்ற பேதம் இல்லாமல் எதிர்கட்சியில் இருக்கின்ற தமிழரசு கட்சிக்கும் விசேடமான நிதியை ஓதுக்கவேண்டும் என முன்வைத்தோம். அதனை ஜனாதிபதி அமைதியாகவும் சிநேக பூர்வமாகவும் அவதானித்து பதில்களை தந்துள்ளார்.

அதேவேளை, இனப்பிரச்சனை தொடர்பாக புதிய அரசியல் யாப்பினை ஏற்படுத்த உள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தபோது, நாங்கள்,அந்த மாற்றத்தின் போது வடக்கு,கிழக்கு இணைந்திருக்க வேண்டும்.சமஷ்டி முறையிலான தீர்வு தேவை என்றபோது, அவர் அரசியல் யாப்பு திருத்தம் வரும்போது கவனத்தில் கொள்வோமென தெரிவித்தது மட்டுமல்லாது,தென்னிலங்கையில் இருக்கின்ற மக்களும் இந்த விடையத்தில் குழப்பமடையாத விதத்தில் அந்த தீர்வினை காணவேண்டும் என்றார்.

அதேவேளை ரில்வின் சில்லா 13 நீக்கவேண்டும் என தெரிவித்தார் ஆனால் ஜனாதிபதி வழக்கமாக இருக்கும் 13 திருத்தசட்டம் நடைமுறையில் இருக்கும் மாகாணசபை முறையில் எந்தவொரு அதிகாரமும் குறைக்கப்படவோ அதிகரிக்கப்படவோ முடியாது. எனவே ரில்வின் சில்வா சொன்ன கருத்திற்கும் ஜனாதிபதி சொல்லும் கருத்திற்கும் இடையிலான முரண்பாடு இருக்கின்றது. எனவே மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி சொல்லும் கருத்து உண்மையான கருத்தாகும்.

கடந்த காலத்தில் தென்னிலங்கை தலைவர்களால் இனப்பிரச்சனை மற்றும் தமிழர்களின் பல்வேறு பிரச்சனை தொடர்பாகவும் ஏமாற்றப்பட்டிருந்தோம். எனவே தென்னிலங்கை தலைவர்கள் செயற்பாடு நடக்கின்ற பொழுதுதான் அவற்றை உண்மையான விடையங்களாக கருதமுடியும் கருத்துக்களை கருத்துக்களாக எடுத்துக் கொள்ள முடியும்.

இதேவேளை நாடாளுமன்ற அரசியல் பேரவையில் எமது .உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளமை மகிழ்சியானங்களுடன் த்துடன் இருந்த மொட்டுகட்சி 3 ஆசனங்களை பெற்றிருக்கின்றது.3 ஆசனங்களுடன் இருந்த தேசிய மக்கள் சக்தி 159 ஆசனங்களை பெற்றுள்ளது. இந்த மாற்றம் என்பது தலைகீழான மாற்றம் ஆகும்.

(கனகராசா சரவணன் )

# ஜப்பானில் வாரத்துக்கு 4 நாட்கள் வேலை: காரணம் என்ன?..

அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் டோக்கியோ பெருநகர (மெட்ரோ) அரசு ஊழியர்களுக்கு வாரத்தில் நான்கு நாட்கள் பணி, மூன்று நாட்கள் விடுப்பு என்ற புதிய பணி



அட்டவணை சார்ந்த கொள்கை திட்டத்தை டோக்கியோ ஆளுநர் யூரிகோ கொய்கே அறிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அதற்கான காரணம் குறித்து பார்ப்போம்.

உலகிலேயே அதிக மக்கள் வசிக்கும் நகரமாக ஜப்பான்



தலைநகர் டோக்கியோ உள்ளது. அந்த நாட்டில் பிறப்பு விகிதம் சரிந்த காரணத்தால் மூத்த வயது மக்கள் அதிகம் வசிக்கும் நாடாகவும் உள்ளது.

இந்நிலையில், டோக்கியோ பெருநகர கூட்ட அமர்வில் பேசிய ஆளுநர் யூரிகோ கொய்கே, “வேலை செய்யும் முறையை நாம் மறு ஆய்வு செய்ய வேண்டிய சூழலில் உள்ளோம். குழந்தை பிறப்பு மற்றும் பராமரிப்பு போன்ற காரணங்களால் யாரும் தங்கள் பணியை விட்டுக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்பதை நாம் உறுதி செய்ய வேண்டும் என்றார்.

# மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மனுவைக் கையளித்தார் அதாஉல்லா

(நூருல் ஹுதா உமர், ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கடந்த பொதுத் தேர்தலில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் புதிய ஜனநாயக முன்னணியில் போட்டியிட்ட தேசிய காங்கிரஸின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம். அதாஉல்லா, நேற்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கல்முனை பிராந்திய அலுவலகத்திற்கு விஜயம் செய்து நடந்து முடிந்த பொதுத் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகள் அடங்கிய மனுவொன்றை உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

திகாமடுல்ல மாவட்டத்தின் தேர்தல் முடிவுகளை மீள எண்ணப்பட வேண்டும் என்பதையும் கடந்த தேர்தல் காலத்தில் தேசிய காங்கிரஸ் தலைவரான தன்னை குறிவைத்து பின்னப்பட்ட பல நகர்வுகளையும் இடையூறுகளையும் உள்ளடக்கிய பல்வேறு விடயங்கள் இம் மனுவில் விஷேடமாக உள்ளடக்கப்பட்டிருந்தது. மனுவை கையளித்த பின்னர் ஊடகங்களுக்கு




கருத்து தெரிவித்த அவர், நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் வாக்காளர்களின் உரிமைகள் திட்டமிடப்பட்ட வகையில் மறுக்கப்பட்டதுடன் வாக்குகள் எண்ணப்பட்டதிலும் பாரதூரமான மோசடிகள் இடம்பெற்றுள்ளன. கச்சேரியில் எமக்கு எதிரான சதி வலை பின்னல் தொடர்ந்தது. ஆரம்பத்தில் காலையில் ஒரு விதமாகவும், பின்னர் வேறு ஒரு விதமாகவும் முடிவுகள் அறிவிக்கப்படலாயின. நாம் திகாமடுல்ல தேர்தல் மாவட்ட முடிவுகளை ஏற்று கொள்ளவில்லை. ஏற்பதாக கையொப்பம் இட்டு கொடுக்கவில்லை. வெளிப்படையாகவே ஆட்சேபித்தோம். ஆனால் புதிய ஜனநாயக முன்னணி 88 வாக்குகளால் தோற்றதாக அறிவிக்கப்பட்டது. நாம் வாக்குகள் எண்ணப்பட வேண்டும் என்று சட்டப்படி முறையாக கச்சேரியில் கோரினோம். ஆனால் வாக்குகளை மீண்டும் எண்ணப்படவே இல்லை. இதை ஆட்சேபித்து கொழும்பில் தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளோம். தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் எழுத்துமூலம் பல தகவல்களையும் திரட்டியுள்ளோம் எனவும் அதாஉல்லா தெரிவித்தார்.

# கொட்டாஞ்சேனை ஸ்ரீஸ்ரீ இராதாகிருஷ்ண ஆலயத்தில் கீதாஜெயந்தி

கொட்டாஞ்சேனை ஸ்ரீஸ்ரீ இராதாகிருஷ்ண ஆலயத்தில் இன்று 11ஆம் திகதி புதன்கிழமை கீதாஜெயந்தி கொண்டாடப்படுகிறது.

இன்றைய தினம் ஆலயத்தில் மாலை 5.00 மணிமுதல் பகவத்கீதையின் 18 அத்தியாயங்களிலுமிருந்து 700 சுலோகங்களும் பாராயணம் செய்யப்படும்.

பகவத் கீதையை வாசிக்கத் தவறியவர்கள் அதனை வாங்கி வாசிக்க ஆரம்பிப்பதற்கும், தம் அன்புக்குரியவர்களுக்கு கீதையை அன்பளிப்பாக வழங்குவதற்கும் உகந்த நாளாக கீதா ஜெயந்தி தினம் திகழ்கிறது.

5000 வருடங்களுக்கு முன்னர் அதாவது, துவாபர யுகத்தில் குருஷேத்திர யுத்தத்தின் போது அர்ஜுனனின் மனக்கலக்கத்தைப் போக்கி அர்ஜுனன் மூலமாக உலக மக்களுக்காக பகவான் கிருஷ்ணர் பகவத் கீதையை போதித்தார்.



அன்றைய தினம் முதல் வருடாந்தம் உலகெங்குமுள்ள பக்தர்களால் கீதா ஜெயந்தி தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. அனைவரும் இந்த கீதா ஜெயந்தி நிகழ்வில் கலந்து கொண்டு பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் அருளை பெற்றுக் கொள்ளுமாறு கிருஷ்ண பக்தர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# கரைத்தீவு பாடசாலையில் தலைமைத்துவ பயிற்சி



(எம் எச் எம் சியாஜ்)

புத்தளம் வை.எல் டீ. பீ (YLDP) தன்னார்வ தொண்டர் குழுவின் ஏற்பாட்டில் கரைத்தீவு முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை (08) பாடசாலையின் அதிபர் ஏ.கே நைமுல்லாஹ் தலைமையில் பிரதி அதிபர் ஏ.சீ.எஸ் பர்சீனின் நெறிப்படுத்தலில் மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி தொடர்பான ஒரு நாள் செயலமர்வு பாடசாலையில் இடம்பெற்றது.

இச் செயலமர்வின் விரிவுரைகள் புத்தளம் தன்னார்வ தொண்டர் குழுவான வை எல் டீ.பீ லுடுனீ யின் செயற்பாட்டாளர்களால் வழங்கப்பட்டதுடன் கரைத்தீவு முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் மாணவர் தலைவர்கள் மற்றும் வகுப்புத் தலைவர்கள் மற்றும் ஆசிரியர்கள் என சகலரும் கலந்து கொண்டதாக வை.எல்.டீ.பீ (YLDP) யின் தலைவர் ஐ. அஸ்ரிக் தெரிவித்தார்.

16, 17, 18,19 ஆம் திகதிகளில்

# வடமேல் மாகாண முஸ்லிம் பாடசாலைகள் நடைபெறும்

(எம் எச் எம் சியாஜ்)

காலநிலையில் ஏற்பட்ட திடீர் மாற்றம் காரணமாக நவம்பர் 27, 28,29 மற்றும் டிசம்பர் 02 ஆகிய தினங்களில் விடுமுறை வழங்கப்பட்ட வடமேல் மாகாண முஸ்லிம் பாடசாலைகள் இம்மாதம் 16, 17, 18 மற்றும் 19 ஆகிய தினங்களில் மீண்டும் நடாத்தப்படும். என வடமேல் மாகாண கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

2024 நவம்பர் 27 அன்று பாடசாலை நடாத்தப்பட்டிருப்பின், 2024 டிசம்பர்16, 17, 18 ஆகிய தினங்களில் மாத்திரம் பாடசாலை நடாத்தப்படும் எனவும் வடமேல் மாகாண கல்வித்திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது.

# மலரும் மொட்டுகள் சிறுவர் நிகழ்ச்சி

(எம் எச் எம் சியாஜ்)



கற்பிட்டி தமிழ் கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் மலரும் மொட்டுகள் எனும் முகநூல் நேரலை சிறுவர் நிகழ்ச்சி மூன்று நாட்கள் நிறைவில் பத்தாயிரம் பார்வையாளர்களையும் தாண்டி சாதனை படைத்துள்ளது.

கற்பிட்டி வரலாற்றில் முதன் முறையாக வாராந்த முகநூல் நேரலை நிகழ்வாக ஆரம்பிக்கப்பட்டுள்ள மலரும் மொட்டுகள் சிறுவர் நிகழ்ச்சி சகல தரப்பினரையும் கவர்ந்துள்ளது.

ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் இரு சிறுவர்கள் தமது திறமைகள் மற்றும் ஆற்றல்களை வெளிக்கொண்டு வரும் வண்ணமாக கற்பிட்டி தமிழ் கலை இலக்கிய மன்றத்தினால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி மலரும் மொட்டுகள் முகநூல் நேரலைநிகழ்ச்சியினை மன்றத்தின் பொருளாளர் கவிதாயினி ஏ.எச்.எப். பர்வின் தொகுத்து வழங்குவதுடன் நேரலையினை கற்பிட்டியின் முகநூல் ஊடகவியலாளர் நிஸ்வி ஹுசைன் மேற்கொள்வதுடன் நெறிப்படுத்தல் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை மன்றத்தின் தலைவர் எஸ்.எம். அருஸ், உப தலைவர் எம்.எம்.எம். நஸ்புல், செயலாளர் எம்.எச்.எம் சியாஜ் மற்றும் நிர்வாக உறுப்பினர்களான ஏ.ஆர்.எம் அஸ்கர், எஸ் சுப்ரமணியம் வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# ரயில் எச்சரிக்கையை அவதானிக்காத இளைஞன் ரயிலில் மோதி உயிரிழப்பு

ரயில் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தும் ரயில் கடவையின் இரு பக்கங்களிலும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் முச்சக்கரவண்டி ஒன்றும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போது அதனை அவதானிக்காது வந்தவாறு மோட்டார் சைக்கிள் ரயிலில் மோதுண்டதில் இளைஞனொருவன் மரணமாகியுள்ளார்.

சிலாபம், வட்டக்கல்லிய ரயில் கடவையில் மோட்டார் சைக்கிள் மீது ரயில் மோதிய விபத்தில் குறித்த இளைஞன் உயிரிழந்துள்ளார். விபத்தில் படுகாயமடைந்த மற்றொரு இளைஞர் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார். சிலாபம் வட்டக்கல்லிய பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய தினுக ஷஷேந்திர பெரேரா என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, விபத்தில் உயிரிழந்த இளைஞனின் தாய், தந்தை மற்றும் சகோதரர்கள் இருவர் சில மாதங்களுக்கு முன்னர் அமெரிக்காவுக்குச் சென்றதாகவும், அவருக்காக தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக தினுகவை அங்கு அழைத்துச் செல்ல முடியவில்லை எனவும் ஆவணங்கள் சரிசெய்யப்பட்ட பின்னர் அவரும் அமெரிக்கா செல்லவிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சிலாபம் பொது வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும், அவரும் தொழிலுக்காக வெளிநாடு செல்ல தயாராகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் வட்டக்கல்லிய ரயில் கடவையில் சமிக்ஞை அமைப்பு செயற்படாததால் ரயில் சமிக்ஞை பராமரிப்பு பிரிவு அதிகாரிகள் வந்து ஒரு வாரத்திற்கு முன்னர் அதனை சரி செய்துள்ள போதும், சிவப்பு ஒளி சமிக்ஞை மாத்திரம் 24 மணித்தியாலமும் ஒளிர்ந்துக் கொண்டிருந்ததாக அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மோட்டார் சைக்கிள் ரயிலில் மோதிய போது, ரயில் கடவையில் முதியவர் ஒருவர் கடமையில் இருந்ததாகவும், ரயில் வருகுதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்த காரணத்தால் ரயில் கடவையின் இரு பக்கங்களிலும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் முச்சக்கரவண்டி ஒன்றும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போது அதனை அவதானிக்காது வந்த மோட்டார் சைக்கிள் ரயில் வீதியில் வந்த வேகத்தில் நுழைந்ததாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

## தகவல் அறியும் உரிமைச் சட்டம்

# செயலமர்வில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



(எம் எச் எம் சியாஜ்)

கற்பிட்டி செடோ ஸ்ரீலங்கா நிறுவனத்தின் ஏற்பாட்டில் கற்பிட்டியில் இடம்பெற்ற தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான செயலமர்வில் கலந்து கொண்ட உயர்தர மாணவர்களை ஊக்குவித்து கௌரவிக்கும் முகமாக சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கற்பிட்டி செடோ ஸ்ரீலங்கா காரியாலயத்தில் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ஏ.ஆர். முனாஸ் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வின் அதிதிகளாக அகில இலங்கை சமாதான நீதவானும், கற்பிட்டி சமாதான சபையின் உறுப்பினருமான ஏ.எச்.எம் சாபி, கற்பிட்டி சுற்றாடல் குழுவின் இணைப்பாளர் எச்.எம் சுகைப், போறூட் நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் எம் மஹீன் மற்றும் சமூக செயற்பாட்டாளர் எம் மஞ்சுளா ஆகியோர் கலந்து கொண்டு தமது அனுபவங்களை மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டதுடன் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களையும் வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

# பஸ் தரிப்பிடத்தில் சடலம்

மதுரங்குளிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வஜிரவத்தை வீதிச் சந்திக்கு அருகில் உள்ள பஸ் தரிப்பிடத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்த நபரின் சடலம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மதுரங்குளிய பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் நேற்று (10) அதிகாலை இந்த மரணம் இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது. புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது அவர் ஏற்கனவே உயிரிழந்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. மதுரங்குளிய பிரதேசத்தில் வசிக்கும் 55 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

மரணம் இடம்பெற்ற விதம் தொடர்பான தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை என தெரிவித்த பொலிஸார், உயிரிழந்தவர் இரவு நண்பர்கள் குழுவுடன் மது அருந்தியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளதாக தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மதுரங்குளிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வாக்களித்த மக்களுக்கு நன்றி



கடந்த நாடாளுமன்றத் தேர்தலில், அநுராதபுரம் மாவட்டத்தில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக போட்டியிட்ட ஏ.ஆர். எம். தாரிகிற்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக, நாச்சியாதுவவில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில், கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் கலந்துகொண்டார்.

# நிலைமாறு கால நீதி எனும் செயலமர்வு



(எம் எச் எம் சியாஜ்)

தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் நீதி மற்றும் பொறுப்புக் கூறலுக்கான மக்கள் ஒன்றிணைவு (ருதுயு)23 ஆவது "நிலைமாறு கால நீதி என்னும் தொனிப் பொருளில் செயலமர்வு" ஒன்று புத்தளம் பாலாவியில் அமைந்துள்ள " வூடப்பட " அமைப்பின் கேட்போர் கூடத்தில் நடை பெற்றது.

இதன் போது சாந்த பத்திரன- தேசிய சமாதானப் பேரவையின் சிரேஷ்ட அதிகாரி மற்றும் என்.விஜயகாந் தேசிய சமாதானப் பேரவையின் திட்ட முகாமையாளர் ஆகியோர் நேரடியாக கலந்து கொண்டு விரிவுரைகளை வழங்கியதுடன் தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெகான் பெரேரா "சூம்" தொழிநுட்பத்துடன் இணைந்து பல்வேறு கருத்துக்களை முன்வைத்தார்.

இந்த செயலமர்வில் மதத் தலைவர்கள் பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 28 வது வருட கதமுல் குர்ஆன் மஜ்லிஸ்

(பீ.எம் முக்தார்)

சீனன்கோட்டை கங்கானம்கொடை நூரானிய்யா ஸாவியா மஸ்ஜிதில் வருடாந்தம் நடைபெற்று வரும் ஷாதுலிய்யா தரீக்காவின் முன்னாள் செய்ஹுஸ் ஸஜ்ஜாத டொக்டர் அஷ்செய்ஹ் முஹம்மத் பாஸி பின் செய்ஹ் முஹம்மத் இப்றாஹிம் அல் பாஸி அல் மக்கி, அஷ் ஷாதிலி ரலியல்லாஹு அன்ஹு அன்னவர்களின் பெயரிலான, 28வது வருட கதமுல் குர்ஆன் மஜ்லிஸ் 12 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அஸர் தொழுகையை தொடர்ந்து கதமுல் குர்ஆன் மஜ்லிஸும், மஃரிப் தொழுகையை தொடர்ந்து வலீபா, யாகூதிய்யா, ஹழரா மஜ்லிஸும், இஷா தொழுகையை தொடர்ந்து முஸாக்ராவும், அதனை தொடர்ந்து துஆவும் இடம் பெறும்.

மேற்படி, ஸாவிய்யா பரிபாலன குழு ஏற்பாடு செய்துள்ள இந்நிகழ்வில் கலீபாக்கள், உலமாக்கள், சீனன்கோட்டை பள்ளிச் சங்க உறுப்பினர்கள், இஹ்வான்கள் பலரும் கலந்து கொள்வர்.

அன்னாரின் ஞாபகார்த்தமாக ஷாதுலிய்யா தரீக்காவை பின்பற்றும் நாட்டின் பல பகுதிகளிலும் ஞாபகர்த்த நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

# மட்டக்களப்பில் காணாமல் போன உறவுகள் நீதிகோரி ஆர்ப்பாட்டம்







(கனகராசா சரவணன், ஆரையம்பதி நிருபர்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கம் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகோரி மட்டக்களப்பு காந்திபூங்காவில் நேற்று செவ்வாய்க்கிழமை (10) கவனயீர்ப்பு ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் சர்வதேச மனித உரிமை தினத்தையிட்டு காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகோரி ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்தனர். இதனையடுத்து மட்டக்களப்பு தந்தை செல்வா பூங்கா வீதி சுற்றுவட்டத்தில் நேற்று காலை 9.00 மணிக்கு நா.உறுப்பினர் வைத்தியர் இ. சிறிநாத். ஞா.சிறிநேசன், முன்னாள் நா. உறுப்பினர் பா.அரியேந்திரன் கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் நடராசா உட்பட ஆயிரக்கணக்கான காணாமல் ஆக்கப்பட்டோர்களின் உறவுகள் ஒன்று கூடினர்.

இதனையடுத்து ஒன்று கூடியவர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் புகைப் படங்கள் மற்றும் கொலைகாரர்களால் நீதி வழங்க முடியுமா? நாங்கள் கேட்பது இழப்பீடோ மரண சான்றிதழையோ அல்ல முறையான நீதி விசாரணையை, எமது உரிமை எமது எதிர்காலம் எப்போது, எமது உறவுகள் எங்கே, என பல வாசகங்கள் கொண்ட சுலோகங்கள் ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பியவாறு ஊர்வலம் ஆரம்பித்து அங்கிருந்து நகர் மணிக்கூட்டு கோபுர சுற்றுவட்டத்தையடைந்து காந்திபூங்காவை சென்றடைந்தது. அதனை தொடர்ந்து காந்திபூங்காவில் நீதி கோரி 11.00 மணிவரை ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் ஆர்பாட்டகாரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

## கிண்ணியாவில் விழிப்புணர்வு ஊர்வலம்




(கியாஸ் ஷாபி )

வெள்ளைப்பட்டி தினத்தை (White Ribbon Day) முன்னிட்டு பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கும் வகையிலான விழிப்புணர்வு ஊர்வலம் கிண்ணியாவில் நடைபெற்றது. இதனை திருகோணமலை பெண்கள் வலையமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

கிண்ணியா பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து விழிப்புணர்வு ஊர்வலம் ஆரம்பமாகி, பிரதான வீதி வழியாகச் சென்று, மீண்டும் இந்த ஊர்வலம் பஸ்தரிப்பு நிலையத்தை வந்தடைந்தது.

2030ஆம் ஆண்டிற்குள் பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்குடன் இந்த விழிப்புணர்வு ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் அவற்றை தடுக்கும் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கும், மற்றும் பொறுப்பு கூறலை கோருவதற்கும் உலகளாவிய முயற்சிகளில் ஐ.நா பெண்கள் அமைப்போடு நாங்களும் இணைகின்றோம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் இளைஞர்களும் யுவதிகளும் வெள்ளைப்பட்டி அணிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மலேசிய உயர் ஸ்தானிகர் கிண்ணியாவுக்கு விஜயம்




(கியாஸ் ஷாபி )

இலங்கைக்கான மலேசிய உயர் ஸ்தானிகர் பத்லி ஹிஷாம் ஆதம் கிண்ணியாவுக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்தார். அங்கு கிண்ணியா அல் மினா மகா வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இதன்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் எயிட் நிறுவனத்தின் அனுசரணையுடன் வழங்கப்பட்ட, அவசர தேவையுள்ள 122 மாணவர்களுக்கு இந்த உபகரணத் தொகுதியை வழங்கி வைத்தார்.

பாடசாலையின் அதிபர் எம். வை ஹுதியத்துள்ளா தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில், ஸ்ரீலங்கா முஸ்லிம் எயிட் நிறுவனத்தின் ஸ்தாபகரும் தலைவருமான ரி.எல்.எம்.நௌஸாத், ஸ்ரீலங்கா முஸ்லிம் எயிட் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் ஏ.சி. பைஸர்கான், தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் நவாஸ் பாறூக் மற்றும் கிண்ணியா வலயக்கல்விப் பணிப்பாளர் முனவ்வரா நளீம் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

## திருகோணமலையிலும் கவன ஈர்ப்புப் போராட்டம்





(எஸ்.கீதபொன்கலன்)

உள்ளக பொறிமுறையை முழுமையாக நிராகரிக்கின்றோம். காணாமலாக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடந்தது? சர்வதேசம் எமது வலியை கண்ணீரை புறக்கணிக்க கூடாது என்ற கோசங்களுடன் நேற்று(10) திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர் உறவுகளின் சங்கத்தினால் கவன ஈர்ப்பு போராட்டம்.திருகோணமலை மாவட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தின் முன்பாக நடைபெற்றது.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இவ் ஆர்ப்பாட்டம் ஒழுங்கு செய்யப்பட்டதாக சங்கத்தின் தலைவி செபஸ்டியன் தேவி கூறினார்.

திருகோணமலை நகரசபை மண்டபத்தின் முன்பாக இருந்து ஊர்வலமாக புறப்பட்ட ஆர்ப்பாட்டம் மனித உரிமைகள் அலுவலகத்தின் முன் நிறைவுபெற்றது.

## வேலையற்ற பட்டதாரிகள் - தாஹிர் எம்பி சந்திப்பு



(எஸ்.சினீஸ் கான்)

அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிருக்குமிடையிலான சந்திப்பொன்று ஒலுவில் கிரீன் வில்லா வளாகத்தில் நடைபெற்றது.

இதன் போது பட்டதாரிகள், அரச தொழில் வாய்ப்பின்றி எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அவ்வமைப்பினால் தெளிவு படுத்தப்பட்டது.

இதன் போது வேலையற்ற பட்டதாரிகள் தொடர்பிலான தகவல்கள், அரச தொழில் தொடர்பான தகவல்கள் மற்றும் பட்டதாரிகளுக்கான மாற்று தொழில் வழிகாட்டல்கள் தொடர்பிலும் முழுமையான தகவல்களை கேட்டறிந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர், இது விடயம் தொடர்பில் பட்டதாரிகளுக்கான தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்கான சகல முஸ்தீபுகளையும் தான் மேற் கொள்வதாக தெரிவித்திருந்தார்.

## கல்வி மேம்பாட்டு கலந்துரையாடல்

(எச்.எம்.எம்.பர்ஸான்)

ஓட்டமாவடி – மீராவோடை பகுதி மாணவர்களின் கல்வி மேம்பாடு மற்றும் நலன் சார்ந்த விடயங்கள் தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று திங்கட்கிழமை மீராவோடை அல் ஹிதாயா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரியும் மீராவோடை அல் ஹிதாயா வித்தியாலய அதிபருமான ஏ.ஜே.மர்சூக் தலைமையில் இக் கலந்துரை யாடல் இடம்பெற்றது.

இதில், மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டங்களை மேற்கொள்ளல் மற்றும் மாணவர்களின் நலன் சார்ந்த விடயங்களில் கவனம் செலுத்துதல் போன்ற விடயங்கள் பேசப்பட்டன.

அத்துடன், தொடராக குறித்த வேலைத்திட்டத்தை மேற்கொண்டு செல்ல துறைசார்ந்தவர்களை இணைத்துக் கொண்டு செயல்படுதல் என தீர்மானம் எடுக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில், கிழக்கு மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் வீ.ரீ.அஜ்மீர், மீராவோடை மீரா ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகத்தினர் மற்றும் இக் கலந்துரையாடலின் ஏற்பாட்டாளரும் சமூக செயற்பாட்டாளருமான ஐ.எம்.றிஸ்வின், ஓட்டமாவடி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும், மீராவோடை ஜும்ஆப் பள்ளிவாசல் கல்விக் குழுத் தலைவருமான கே.பி.எஸ்.ஹமீட், பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் நியமனம்!



(முகமட் முக்தார், க.சரவணன்)

கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளராக இலங்கை நிருவாக சேவையின் முதலாம் வகுப்பு விசேட தரத்தைச் சேர்ந்த எஸ்.அருள்ராஜா நியமனம் செய்யப்பட்டுள்ளார். கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயலால் இரத்னசேகர முன்னிலையில் திங்கட்கிழமை(09) எஸ். அருள்ராஜா செயலாளராக கடமையேற்றுக்கொண்டார்.

இறுதியாக இவர் வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக கடமையாற்றினார்.

## பெரியகல்லாறு பகுதியில் பாரிய வாகன விபத்து



(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு பெரியகல்லாறு பகுதியில் நேற்று பகல் இடம்பெற்ற பாரிய வாகன விபத்தில் தெய்வாதீனமாக அதில் பயணித்தவர்கள் உயிர் தப்பியுள்ளனர்.

பெரியகல்லாறு பாலத்திற்கு அருகில் எதிர் எதிரே பயணித்துக் கொண்டிருந்த மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி ஏற்பட்ட குறித்த விபத்தில் வாகனங்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதே தவிர உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை களுவாஞ்சிக்குடி பொலிஸார்தெரிவித்தனர். விபத்துகுறித்தமேலதிகவிசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## இறால்குழி - நாவலடியில் யானைகள் துவம்சம்

(கியாஸ் ஷாபி )

திருகோணமலை – மூதூர் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள இறால்குழி – நாவலடி கிராமத்துக்குள் நேற்றுமுன்தினமிரவு காட்டு யானைகள் உட்புகுந்து, துவம்சம் செய்துள்ளதாக கிராமவாசிகள் தெரிவிக்கின்றனர்.

அங்குள்ள தென்னை மரங்களை துவம்சம் செய்துள்ளதோடு, குடியிருப்பு வீடொன்றையும் சேதப்படுத்தி உள்ளது.

வீட்டை உடைக்கும் போது, அங்கு குடியிருந்தவர்கள் பலத்த போராட்டத்துக்கு மத்தியில் அயலவர்களை உதவிக்கு அழைத்து பாதுகாப்பாக வெளியேற்றியதாக தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சியாக இந்த கிராமத்தை காட்டு யானை தாக்கி வருவதால், ஒவ்வொரு இரவையும், அச்சத்தோடுதான் கழித்து வருவதாக கூறும் மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கு வழி செய்யுமாறும் இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## அரிசி ஆலைகள் சோதனை

மட்டக்களப்பில் ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கு அமைய அரிசி ஆலைகள் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாக பாவனையாளர் அலுவலகள் அதிகார சபையின் மாவட்ட பொறுப்பதிகாரி என்.எம். சப்ராஸ் (09) தெரிவித்தார்.

ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கு அமைய தடையின்றி கட்டுப்பாட்டு விலையில் மக்களுக்கு அரிசி கிடைக்கும் வண்ணம் அரிசி ஆலைகள் கண்காணிக்கப்பட்டு வருவதுடன் அரிசி ஆலையில் இருப்பில் உள்ள நெல் மற்றும் அரிசி தொடர்பான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதாகம் கருத்து தெரிவித்தார்.

# சர்வதேச நீதிக்கான அவசர கோரிக்கை





சர்வதேச மனித உரிமைகள் தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. அந்த வகையில் வாழ்வதற்கான உரிமை மறுக்கப்பட்ட எமது அன்புக்குரியவர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டு 15 வருடங்கள் கடந்து விட்டன. அவர்களுக்குரிய நீதியை கேட்டு போராடி வரும் எங்களுக்கும் எமது பிள்ளைகளின் தற்போதைய நிலையை அறியும் உரிமையும் அதைக்கேட்டுப் போராடும் உரிமையும் மறுக்கப்பட்டுள்ளது. தடையுத்தரவு, பயங்கரவாதத்தடுப்பு பிரிவினரின் விசாரணை, வழக்குத்தாக்கல் செய்தல் என்ற தடைகள் மூலமாக வயோதிபத் தாய்மார்களாகிய எங்களை போராட்டத்திலிருந்து அகற்ற முயற்சிக்கப்படுகிறது. இலங்கையில் 75 ஆண்டுகளாக தமிழர்கள் இரண்டாந்தர பிரஜைகளாக நடாத்தப்பட்டு வந்திருக்கிறார்கள். கல்வி, பல்கலைக்கழக அனுமதி, தொழில் வாய்ப்பு, மொழி, பண்பாட்டிற்கான உரிமை என்பவற்றில் காட்டப்பட்ட பாரபட்சம், புறக்கணிப்பு என்பவற்றால் பாதிக்கப்பட்ட இளைஞர்கள் கிளர்ந்தெழுந்தார்கள். அதன் நியாயத்தன்மையை உணர்ந்த தமிழ் அரசியல் தரப்பினரும், பொதுமக்களும் தமது ஆதரவைக் கொடுத்து அவர்களை ஊக்குவித்தார்கள். மக்களது ஆதரவு இன்றி போராட்டம் இந்தளவு வளர்ந்திருக்க முடியாது என்ற உண்மை போராட்டத்தில் இணைந்திருந்த தரப்புக்கு நன்கு புரியும். உரிமைக்கான போராட்டம் பயங்கரவாதம் என்ற முத்திரை குத்தப்பட்டு சர்வதேசத்தின் உதவியுடன் 2009 மே மாதத்தில் மௌனிக்கச் செய்யப்பட்டது. அதற்கு பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. சுமார் 20,000 மக்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டனர். ஆயிரக்கணக் கானவர்கள் அங்கவீனர்களாக்கப்பட்டனர். அரச பயங்கரவாதம் இயன்றளவையும் செய்துவிட்டு "கிரிபத்" கொடுத்து தமது வெற்றியைக் கொண்டாடியது. ஆனால் அரசையும் அதன் வாக்குறுதியையும் வேறுவழியின்றி நம்பி சரணடைந்த, ஒப்படைக்கப்பட்ட எமது உறவுகள் அரசியல் கைதிகளாக சிறையிலும், அடிமைகளாக இரகசிய வதை முகாம்களிலும் வாடுகின்றார்கள். இவர்களிற்கான நீதிக்காக 2,850 நாட்களாக தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நாம் மன அழுத்தத்திற்குள்ளாகி இறந்து கொண்டிருக்கின்றோம். ஆனால் பதவிக்கு வந்த ஆட்சியாளர்கள் அனைவரும் தமக்கு வாக்களித்தவர்களைத் திருப்திப்படுத்துவதிலேயே குறியாய் இருக்கிறார்கள். எம்மையும், சர்வதேசத்தையும் ஏமாற்றி கால இழுத்தடிப்புகளை மேற்கோண்டு தமது பதவிக்காலத்தை காப்பாற்றிக் கொள்கின்றனர். நாம் தற்போது சுதாகரித்துக் கொண்டுள்ளோம். ஆனால் சர்வதேசத்திற்கு அரசின் கபடத்தனம் புரியவில்லை. தற்போது "மாற்றம்" என்ற கோஷத்துடன் புதியவர்கள் ஆட்சியமைத்துள்ளனர். அவர்களும் போராட்ட வழியில் வந்தவர்கள் என்ற பரிந்துரையை சில நாட்டின் பிரதிநிதிகள் எம்மிடம் தெரிவிக்கின்றார்கள்.

அவர்களுக்கும் அதே கருத்துடைய அனைவருக்கும் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகின்றோம். 15 வருடங்களாக பல்வேறுபட்ட பெயர்களில் கொண்டுவரப்பட்ட பொறிமுறைகளில் எம் ஈடுபாடு, அங்கு காட்டப்பட்ட உண்மைத்தன்மையின்மை, உதாசீனங்கள் என்பன எமக்கு பலத்த ஏமாற்றத்தையும் விரக்தியையும் தந்ததால் நாம் உள்ளகப் பொறிமுறைகளை நிராகரித்து சர்வதேசப் பொறிமுறையை கோரி நிற்கின்றோம். எமக்கு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு புதிய அரசாங்கத்தை நம்பி எம்மை அணுகுபவர்களுக்கே உண்டு. பாதிக்கப்பட்டவர்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்ற உண்மைத்தனத்துடனும், எம்மை அக்கறையுடனும் அணுகுவதாயின் எமது நம்பிக்கையை கட்டி எழுப்புவதற்காக பின்வரும் விடயங்கள் மேற்கொள்ளப்படவேண்டும்.

1. எமது உறவுகள் சரணடைந்த, கையளிக்கப்பட்ட , கைது செய்யப்பட்ட ,முக்கியமான நான்கு காவலரண்களுக்குப் பொறுப்பாக இருந்த இராணுவ அதிகாரிகள் விசாரிக்கப்பட்டு உண்மை அறியப்பட வேண்டும். அவர்கள் அனைவரும் உயிருடனும், நல்ல பதவிகளிலும் தற்போதும் உள்ளார்கள். அதுவே காலம்காலமாக ஏமாற்றப்பட்டு வந்த எமக்கு நல்லெண்ண சமிக்ஞையாக இருக்கும்.
2. எம்மால் செயலற்றது என்று நிரூபிக்கப்பட்ட அலுவலகம் கலைக்கப்பட வேண்டும்.

உள்நாட்டு பொறிமுறைகளிலும், சிறிலங்கா அரசிலும் நம்பிக்கை இழந்த நாம் சர்வதேச பொறிமுறையை கோரி 2,850 நாட்களாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம். சர்வதேசப் பொறிமுறைக்குத் தேவையான சாட்சிகள் ஐ.நா இன் ஆவணம் திரட்டும் பொறிமுறை மூலம் திரட்டப்பட்டுள்ளது. எனவே ஆவணத்திரட்டல் தொடரும் அதேநேரம், அதற்குச் சமாந்தரமாக சர்வதேச நீதிப்பொறிமுறை ஒன்றின் கீழும் நடவடிக்கை எடுப்பதன் மூலம் வயோதிபத் தாய்மாராகிய நாமும் இறப்பதற்கு முன் நீதியைப் பெற்றிட உதவுங்கள். ■

# அடிப்படை சம்பளத்தை அதிகரிக்குமாறு பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம்





(எஸ்.சதீஷ் நிருபர்)

கொத்மலை ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் அடிப்படை சம்பளத்தை அதிகரிக்கக் கோரி பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் கடந்த புதன்கிழமை தொடக்கம், தொழிற்சாலைக்கு முன்னால் நடந்த போராட்டத்தில் சம்பளத்தை 5000 ரூபா அதிகரிக்குமாறு வழயுறுத்தினர் தொழிற்சாலை நிர்வாகத்திற்கு சம்பளத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிவந்த நிலையில், எவ்வித பதிலும் வழங்காததால் நேற்று காலை முதல் பகிஷ்கரிப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

# மகாவலி ஆற்றில் ஆணின் சடலம்

(க.கிஷாந்தன்)

மகாவலி ஆற்றில் மிதந்து கொண்டிருந்த சடலம் ஒன்று நேற்று (10) மீட்கப்பட்டதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

நாவலப்பிட்டி ஹப்புகஸ்தலாவ பிரதான வீதியில் மல்லந்த பாலத்தின் கீழ் மகாவலி ஆற்றில் சடலம் ஒன்று மிதப்பதாக கிடைத்த தகவலின் பேரில் நாவலப்பிட்டி பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தை மீட்டுள்ளனர். 40-45 வயது மதிக்கதக்க இனந்தெரியாத நபரின் சடலம் தொடர்பில் நாவலப்பிட்டி நீதவானின் ஸ்தல பரிசோதனையின் பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

# என்.சி போதைப் பொருளுடன் ஒருவர் கைது

(க.கிஷாந்தன்)

என்.சி போதைப்பொருளை விற்பனை செய்த சந்தேக நபர் ஒருவர் 3 கிலோ போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் இவர் கைது செய்யப்பட்டதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

சுகாதார அமைச்சினால் தடைசெய்யப்பட்ட என்.சி என்ற போதைப்பொருள் சிறிய பொதிகளில் பொதியிடப்பட்டு தோட்டங்களில் உள்ள இளைஞர்களுக்கு ஒரு பக்கட் 500 ரூபாய் முதல் 1000 ரூபாய் என்ற அடிப்படையில் விற்கப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் பொகவந்தலாவ பிரிட்வேல் தோட்டத்தில் வசிப்பவர் எனவும் சந்தேக நபரின் வீட்டை சோதனையிட்ட போது வீட்டில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 3 கிலோ கிராம் என்.சி போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பொகவந்தலாவ பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# எல்பிட்டிய பிரதேச சபையில் ஆளும் கட்சியினர் சத்தியப்பிரமாணம்




தேசிய மக்கள் சக்தி கைப்பற்றிய எல்பிட்டிய பிரதேச சபையின் தலைவர், உபதலைவர் உள்ளிட்ட தேசிய மக்கள் சக்தியின் 15 உறுப்பினர்கள் நேற்று (10) காலை பிரதி அமைச்சர் ரத்ன கமகே முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

இந்நிகழ்வில் காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிஷாந்த பெரேராவும் கலந்து கொண்டார்.

எல்பிட்டிய பிரதேச சபையின் தலைவராக சனத் சுமனசிறியும், உபதலைவராக சுமித் பத்திரகேவும் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதுடன், மூன்று பெண் உறுப்பினர்கள் உட்பட 12 உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய பிரதியமைச்சர் ரத்ன கமகே, எல்பிட்டிய பிரதேச சபையை இலங்கையின் சிறந்த பிரதேச சபையாக மாற்றுவதற்கு நாம் செயற்படுவோம் என்றார்.

# எல்ல பகுதியில் அதிகரிக்கும் சுற்றுலா பயணிகளின் வருகை

(க.கிஷாந்தன்)



எல்ல பகுதிக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகளின் வருகை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எல்ல பகுதிக்கு அதிக சுற்றுலா பயணிகள் வருகை தருவதால் மாலை நேரங்களில் பிரதான வீதிகளில் வாகனங்கள் நகரவே முடியாத சூழல் காணப்படுகின்றது.

சுற்றுலாப் பயணிகள் பூங்கா, ராவணா எல்ல நீர்வீழ்ச்சி ஆகியவற்றுக்கு அதிகம் செல்வதால் அப்பகுதியில் வாடகை வாகன ஓட்டுநர்கள், சுற்றுலா வழிகாட்டிகள், ஹோட்டல் உரிமையாளர்கள், வர்த்தகர்கள், வணிகர்கள் ஆகியோரின் வருமானமும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.








சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று வட-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஆர்ப்பாட்ட பேரணியில் ஈடுபட்டனர். வவுனியா, கந்தசாமி ஆலயத்திற்கு முன்பாக ஆரம்பமான பேரணி, பசார் வீதி வழியாக வந்து பழைய பேருந்து நிலையப் பகுதியில் முடிவடைந்தது. (படங்கள் : கி.வசந்தன்)

# ஜக்தீப் தன்கருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம்

ராஜ்யசபா தலைவரான ஜக்தீப் தன்கருக்கு எதிராக காங்கிரஸ் தலைமையிலான இந்திய எதிர்க்கட்சி நேற்று(10) காலை நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவந்தது.



காங்கிரஸ், வங்காளத்தில் ஆளும் திரிணாமுல், அரவிந்த் கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி, அகிலேஷ் யாதவின் சமாஜ்வாதி, தமிழகத்தின் திராவிட முன்னேற்றக் கழகம், லாலு யாதவின் ராஷ்டிரிய ஜனதா தளம் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த 50 இற்கும் மேற்பட்ட எம்.பி.க்கள் கையெழுத்துடன் இந்த நம்பிக்கையில்லா தீர்மானம் இந்திய நாடாளுமன்றத்தின் மேலவையான ராஜ்யசபாவில் சமர்ப்பிக்கப்பட்டது.

நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்து எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும் எம்.பி.யுமான ஜெய்ராம் ரமேஷ், மாநிலங்களவையின் (ராஜ்யசபா) நடவடிக்கைகளை அவர் மிகவும் பக்கச்சார்பாக நடத்தி வருவதால், ராஜ்யசபா தலைவருக்கு எதிராக முறையாக நம்பிக்கையில்லா தீர்மானத்தை சமர்ப்பிப்பதைத் தவிர, எதிர்க்கட்சிகள் குழுவைச் சேர்ந்த அனைத்துக் கட்சிகளுக்கும் வேறு வழியில்லை. எதிர்க்கட்சிகளுக்கு இது மிகவும் வேதனையான முடிவு, எனினும், நாடாளுமன்ற ஜனநாயகத்தின் நலன்களுக்காக அவர்கள் இந்த நடவடிக்கையை எடுக்க வேண்டியிருந்தது என குறிப்பிட்டுள்ளார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை ராஜ்யசபா பொதுச்செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.இந்திய அரசியலமைப்பின் 67 (பி) பிரிவின்படி, ராஜ்யசபாவால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மற்றும் மக்களவையின் ஒப்புதல் மூலம் ஒரு துணை ஜனாதிபதி அவரது பதவியில் இருந்து நீக்கப்படலாம். இந்த விதியின்படி, எம்.பி.க்கள் துணை ஜனாதிபதிக்கு எதிராக தீர்மானம் கொண்டு வர விருப்பம் தெரிவித்து 14 நாட்களுக்கு அறிவிப்பு கொடுக்க வேண்டும்.

எனினும், இரு அவைகளிலும் எதிர்க்கட்சிகளுக்கு பெரும்பான்மை இல்லாததால் ஜக்தீப் தன்கருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றி பெறுவதற்கு வாய்ப்பு இல்லை என்றும் கூறப்படுகிறது.




# திருவண்ணாமலை கோயிலில் கற்பூரம் ஏற்றுவத்கு தடை..!

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோயிலில் திருத்தேரோட்டம் நடைபெறும் நிலையில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் குவிந்துள்ளதால் கோயில் வளாகத்தில் கற்பூரம் ஏற்ற தடை விதிக்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோயிலில் முக்கிய திருவிழாவான கார்த்திகை தீபத்திருவிழா கொண்டாட்டம் ஆரம்பித்துள்ளது. அந்த வகையில் திருவண்ணாமலை கோயிலின் முக்கிய உற்சவங்களில் ஒன்றான மகாதேரோட்டம் நடைபெற்றது.

மேலும் வருகின்ற 13ம் திகதி அருணாசலேஸ்வரர் கோயில் கருவறையில் அதிகாலை 4 மணிக்கு பரணி தீபமும், அன்றைய தினம் மாலை 2ஆயிரத்து 668 அடி உயர மலையின் மீது மகாதீபமும் ஏற்றப்படவுள்ளது. இதற்கான பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் பரணி தீபத்தை காண இலட்சக்கணக்கான மக்கள் கூட உள்ளனர்.



திருவண்ணாமலையில் திருத்தேரோட்டம் நடைபெற்ற நிலையில் ஆயிரக் கணக்கான பக்தர்கள் குவிந்துள்ளதால் கோவில் வளாகத்தில் கற்பூரம் ஏற்ற தடை விதிக்கப்பட்டுள்ளது. திருத்தேரோட்டத்தை ஒட்டி மாடவீதியில் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. வடக்கு மண்டல ஐ.ஜி. அஸ்ரா கார்க் தலைமையில் 6 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். முன்னதாக திருவண்ணாமலை கார்த்திகை மகா தீப திருவிழாவையொட்டி, கிரிவலம் தொடர்பாக பல்வேறு வழிகாட்டு நெறிமுறைகளை காவல் துறை வெளியிட்டிருந்தது.

அதன்படி திருவண்ணாமலைக்கு வரும் பக்தர்களுக்கு நீர் மோர் வழங்குதல், ஆசிர்வதித்தல் என்ற போர்வையில் ஏமாற்றியும், மிரட்டியும் பணம் வசூலிப்பது, குற்றம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பக்தர்கள் நான்கு கோபுரங்களுக்கு முன்பாகவோ, கிரிவலப்பாதையிலோ கற்பூரம் ஏற்றக்கூடாது. கால்நடை உரிமையாளர்கள், கால்நடைகளை கிரிவலப்பாதையில் உலவவிடக்கூடாது. உரிய அனுமதியின்றி அன்னதானம் வழங்குவது தடை செய்யப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்ட இடங்களிம் மட்டுமே அன்னதானம் வழங்க வேண்டும். பக்தர்கள் கிரிவல பாதையை ஒட்டியுள்ள நீர்நிலைகளுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும். அனுமதியின்றி வனப்பகுதியில் பிரவேசிப்பதும், மலையின் மீது ஏற முயற்சிப்பது குற்றம். அவ்வாறான செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது, சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆழ்துளை கிணற்றில் தவறி விழுந்த சிறுவன்; மீட்பு பணி தீவிரம்

ராஜஸ்தானில் 250 அடி ஆழம் கொண்ட ஆழ்துளை கிணற்றில் தவறி விழுந்த 5 வயது சிறுவனை மீட்கும் முயற்சியில் தேசிய பேரிடர் மீட்பு படையினர் ஈடுபட்டுள்ளனர்.

ராஜஸ்தான் மாநிலம் தவுசா மாவட்டத்தில் நங்கல் கிராமத்தில் திங்கட்கிழமை (09) மாலை 5 வயது சிறுவன் விளையாடி கொண்டிருந்தான். அருகில் 250 அடி ஆழம் கொண்ட ஆழ்துளை கிணறு ஒன்று இருந்துள்ளது. இதில், 5 வயது சிறுவன் தவறி விழுந்துள்ளான். பதறி போன



பெற்றோர் மற்றும் அக்கம்பக்கத்தினர் மீட்க முயற்சி செய்தனர். பின்னர் மீட்பு படை அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தனர்.

திங்கட்கிழமையிலிருந்து 5 வயது சிறுவனை மீட்கும் முயற்சியில் தேசிய பேரிடர் மீட்பு படையினர் ஈடுபட்டுள்ளனர். சிறுவன் தற்போது 150 அடி ஆழத்தில் இருக்கிறான். சிறுவன் உடல்நிலை சீராக உள்ளது. சிறுவனுக்கு தொடர்ந்து ஒட்சிசன் கொடுக்கப்பட்டு வருகிறது என மீட்பு படை அதிகாரி தெரிவித்தார்.

# மும்பையில் விபத்து: 7 பேர் உயிரிழப்பு, 42 பேர் காயம்



மும்பையின் குர்லா பகுதியில் திங்கட்கிழமை (09) இரவு பஸ் ஒன்று பாதசாரிகள் மற்றும் வாகனங்கள் மீது மோதியதில் குறைந்தது 4 பேர் உயிரிழந்ததாகவும், 32 பேர் காயமடைந்ததாகவும் இந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றிரவு 09.45 மணியளவில் பிரஹன்மும்பை மின்சாரம் வழங்கல் மற்றும் போக்குவரத்து நிறுவனத்துக்கு சொந்தமான பஸ், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து, பல வாகனங்கள், பாதசாரிகள் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் நடந்தபோது, குறித்த பஸ் குர்லாவிலிருந்து அந்தேரிக்கு சென்று கொண்டிருந்ததாக மும்பை பொலிஸார் தெரிவித்தனர்.

அதன் பாதையில் சென்ற மக்கள் தாக்கப்பட்டதால், சம்பவ இடத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

இறுதியில் சுவரில் மோதி பஸ் நின்றது.

இதற்கிடையில், நேற்று (10) தடயவியல் குழு விபத்து நடந்த இடத்திற்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டது. விபத்துக்குப் பின்னர், உள்ளூர்வாசிகள் காயமடைந்தவர்களை அருகிலுள்ள பாபா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

சிறிது நேரத்தில் காவல்துறை மற்றும் தீய காயமடைந்தனர், சிலர் இன்னும் வைத்தியசாலை, பிற மருத்துவ மையங்களில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்ட நிலையில், விபத்துக்கான காரணத்தை கண்டறிய பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பாகிஸ்தான் காவல்துறையில் ஹிந்து பொலிஸ் அதிகாரி

பாகிஸ்தானில் சிறுபான்மையராக வாழும் ஹிந்து சமூகத்தில் இருந்து இளைஞர் ஒருவர் அந்நாட்டின் குடிமைப் பணிகள் தேர்வில் இந்த ஆண்டு வெற்றி பெற்று பொலிஸ் அதிகாரியாக தேர்வாகியுள்ளார். பாகிஸ்தான் பொலிஸ் படையில் (பிஎஸ்பி) ஹிந்து மதத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் அதிகாரியாக பணி நியமனம் செய்யப்பட்டு இருப்பது பாகிஸ்தானில் உள்ள சிறுபான்மையின சமூகங்களுடைய பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.



பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் உள்ள பொருளாதார ரீதியாக பின்தங்கிய கிராமமான பாதின் பகுதியைச் சேர்ந்த ராஜேந்தர் மேக்வாருக்கு அந்நாட்டின் பெருநகரங்களில் ஒன்றான ஃ துணை ஜனாதிபதி பைச லாபாத்தின் பொலிஸ்பிரிவு உதவி கண்காணிப்பாளர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானில் சிறுபான்மையினர் பாரபட்சத்துடன் நடத்தப்படும் சூழல் நிலவுவதாகவும் இந்நிலையில் சிந்து இளைஞரின் பணி நியமனம் சிறுபான்மையின மக்களின் பிரச்சினைகளை களைய உதவும் என்று ஹிந்து சமூகத் தலைவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பாகிஸ்தானிலுள்ள 24 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் தொகையில் சுமார் 2 சதவிகிதம் தான் ஹிந்துக்கள் வாழ்கிறார்கள். இந்த நிலையில் பிற அரசதுறைகளைப் போல அல்லாமல் பொலிஸ்பிரிவின் ஓர் அங்கமாக இருப்பதன் மூலம் மக்கள் பிரச்சனைகளை நேரடியாக தொடர்பு கொள்ள முடிகிறது என ராஜேந்தர் மேக்வார் தெரிவித்துள்ளார். அவரது பணி நியமனத்தை பொலிஸ்பிரிவின் உயர் அதிகாரிகளும் வரவேற்றுள்ளனர்.

# பருத்தி வெடிகுண்டு சம்பவம்: குற்றவாளி கைது

குருகிராம் (ஹரியானா) பொலிஸார் பருத்தி வெடிகுண்டை வீசும் செயலில் ஈடுபட்ட சச்சின் என்ற நபரை நேற்று கைது செய்தனர்.




குருகிராமில் உள்ள 29 ஆவது பிரிவிற்கு வெளியே உள்ள கிளப்களுக்கு நேற்று(10) காலை இரண்டு பருத்தி வெடிகுண்டுகள் வீசப்பட்டன. சம்பவத்தன்று சச்சின் குடிபோதையில் இருந்ததாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. ”குற்றம் சாட்டப்பட்டவர் குடிபோதையில் இருந்தார். அவர் ஏற்கனவே இரண்டு பருத்தி வெடிகுண்டுகளை வீசியிருந்தார், மேலும் இரண்டை வீசத் தயாராக இருந்தார், அப்போது பொலிஸார் தலையிட்டு வெடிகுண்டுகளுடன் அவரைக் கைது செய்தனர்” என குருகிராம் பொலிஸார் தெரிவித்தனர்.

குருகிராம் பொலிஸ் அதிகாரி விகாஸ் அரோரா, சம்பவ இடத்தை நேரில் ஆய்வு செய்தார். அவரது அறிவுறுத்தலின் பேரில், குருகிராம் பொலிஸாரின் வெடிகுண்டு செயலிழப்புக் குழு அப்பகுதியை ஆய்வு செய்து பாதுகாப்பதற்காக வரவழைக்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் இருந்து மீட்கப்பட்ட இரண்டு பருத்தி வெடிகுண்டுகள், வெடிகுண்டு செயலிழப்புக் குழுவினரால் செயலிழக்கச் செய்யப்பட்டன என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில் ஸ்கூட்டி மற்றும் பலகைக்கு லேசான சேதம் ஏற்பட்டது. உயிர்சேதமோ காயமோ ஏற்படவில்லை. இந்தச் செயலுக்கான காரணத்தை கண்டறிய குருகிராம் பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் கர்நாடக மாநில முதல்வர் எஸ்.எம்.கிருஷ்ணா காலமானார்

கர்நாடக மாநிலத்தின் முன்னாள் முதல்வரும், முன்னாள் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சருமான எஸ்.எம்.கிருஷ்ணா 92 வயதில் காலமானார்.

கடந்த சில மாதங்களாக உடல்நலக் குறைவு காரணமாக அவர் மருத்துவ சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில், நேற்று (10) 2.30 மணி அளவில் அவர் உயிரிழந்தார். கடந்த ஆண்டு அவரது அரசியல் பணியை போற்றும் வகையில் நாட்டின் உயரிய விருதுகளில் ஒன்றான பத்ம விபூஷண் விருது வழங்கப்பட்டது.



1932 இல் கர்நாடக மாநிலத்தின் சோமஹல்லியில் பிறந்த இவர் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் கல்வி பயின்றவர். கடந்த 1962 இல் அவரது அரசியல் வாழ்க்கையை தொடங்கினார். பிரஜா சோசியலிஸ்ட் கட்சி (1962–71), காங்கிரஸ் கட்சி (1971 – 2017) மற்றும் பாஜக இல் (2017 – 2023) அவர் பணியாற்றியுள்ளார். கர்நாடக மாநில முதல்வராக 1999 முதல் 2004 வரை அவர் செயல்பட்டார். அப்போது மாநில வளர்ச்சி சார்ந்து பல்வேறு திட்டங்களை அறிமுகம் செய்தார். பெங்களூருவின் நவீன வளர்ச்சியில் இவரது பங்கும் உள்ளது. அதே நேரத்தில் மறைந்த கன்னட நடிகர் ராஜ்குமாரை வீரப்பன் கடத்தி சென்றது மற்றும் காவிரி போராட்டம் உள்ளிட்ட நெருக்கடிகள் அவரது ஆட்சி காலத்திலேயே நிலவியது.

2023 இல் அரசியலில் இருந்து ஓய்வு பெற்றார். வயது முதிர்வு காரணமாக தன்னால் எந்த கட்சிக்கும் பிரச்சாரம் செய்ய முடியாது என தெரிவித்துள்ளார். 2004 முதல் 2008 வரை மகாராஷ்டிரா மாநில ஆளுநராகவும், 2009 முதல் 2012 வரை அன்றைய பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான ஆட்சியில் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சராகவும் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# சிரியா விவகாரம் தொடர்பான ஐ.நா.வின் அறிக்கை

## அமெரிக்க ரஷ்ய இராஜதந்திரிகள் தெரிவிப்பு

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் உறுப்பினர்கள் எதிர்வரும் நாட்களில் சிரியா குறித்த அறிக்கையை வெளியிடுவார்கள் என்று அமெரிக்க மற்றும் ரஷ்ய இராஜதந்திரிகள் நேற்று (10) தெரிவித்தனர்.

தலைநகர் டமஸ்கஸை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியது மற்றும் ஜனாதிபதி பஷர் அல்-ஆஸாத்தை வெளியேற்றியது குறித்து ஐ.நா.வின் மூடிய கதவு கூட்டத்திற்குப் பின்னர் இந்த அறிவிப்பு வந்துள்ளது.



15 உறுப்பினர்களை கொண்ட கூட்டத்தின் பின்னர் உரையாற்றிய ரஷ்யாவுக்கான ஐ.நா.வின் தூதுவர் வசிலி நெபென்சியா (Vassily Nebenzia) சிரியாவின் பிராந்திய ஒருமைப்பாடு, ஒற்றுமையைப் பாதுகாப்பது, குடிமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வது மற்றும் தேவைப்படும் மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் விநியோகிப்பதை உறுதிசெய்வது ஆகியவை தொடர்பில் சபை கவனம் செலுத்தியதாக கூறினார்.

ஐ.நா.வுக்கான அமெரிக்காவின் துணை தூதர் ரொபர்ட் வூட்டும் (Robert Wood), பெரும்பாலான உறுப்பினர்கள் மேற்கண்ட பிரச்சினைகள் குறித்து பேசியதை உறுதிப்படுத்தினார். சந்திப்பின் பின்னர் சிரியாவுக்கான ஐ.நா. தூதர் குஸ்ஸே அல்டாஹாக் (Koussay Aldahhak), தனது பணி மற்றும் வெளிநாட்டில் உள்ள அனைத்து சிரிய தூதரகங்களும் தங்கள் பணியை தொடரவும், மாற்ற காலத்தில் அரசு நிறுவனத்தை பராமரிக்கவும் அறிவுறுத்தல்களைப் பெற்றுள்ளன. இப்போது நாங்கள் புதிய அரசாங்கத்திற்காக காத்திருக்கிறோம். நாங்கள் சிரிய மக்களுடன் இருக்கிறோம். நாங்கள் நாட்டு மக்களைப் பாதுகாப்போம் மற்றும் பணியாற்றுவோம். எனவே மறு அறிவிப்பு வரும் வரை நாங்கள் எங்கள் பணியைத் தொடருவோம் என குறிப்பிட்டார்.

தாக்குதல் ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் (HTS) ஆல் தொடங்கப்பட்டது. இது முன்னர் நுஸ்ரா முன்னணி என்று அழைக்கப்பட்டது, 2016 இல் சிரியாவில் அல் கொய்தாவின் அதிகாரப்பூர்வ பிரிவாகவும் இருந்தது.

HTS ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பாக பார்க்கப்படவில்லை. அமெரிக்கா, பிரித்தானியா, கனடா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தால் இது ஒரு பயங்கரவாதக் குழுவாகக் கருதப்படுகிறது.

இந்த நிலையில் மூடிய கதவுகளுக்கு பின்னாலான ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தின் பின்னர், தடைகள் பட்டியலில் இருந்து HTS ஐ நீக்குவது குறித்து எந்த விவாதமும் நடைபெறவில்லை என்றும் ரஷ்ய மற்றும் அமெரிக்க இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

# தென்கொரியா ஜனாதிபதி வெளிநாடு செல்ல தடை



தென்கொரியாவின் ஜனாதிபதி ஜுன் சுக் இயோல் தலைமையிலான மக்கள் அதிகார கட்சி ஆட்சி நடைபெறுகிறது. கடந்த வாரம் தென்கொரியாவில் இராணுவ அவசர நிலை பிரகடனத்தை ஜனாதிபதி ஜுன் சுக் இயோல் அறிவித்தார். இவரது இந்த முடிவுக்கு ஆளும் கட்சியிலேயே கடும் எதிர்ப்புக்கள் கிளம்பின. இதனை அடுத்து அவசர நிலை கைவிடப்பட்டது. எனினும் அவசர நிலையை செயல்படுத்தியதற்காக ஜனாதிபதி பதவி விலக வேண்டுமென நாடு முழுவதும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் நாட்டு மக்களிடம் அவர் பகிரங்கமாக மன்னிப்பு தெரிவித்தார். எனினும் அவருக்கு எதிரான போராட்டங்கள் நடைபெற்று வருகின்றது. மற்றொரு பக்கம் அவசர நிலை பரிந்துரை செய்ததற்காக அவர் மீது விசாரணை நடத்த அரசு முடிவு செய்துள்ளது. இதனால் ஜுன் சுக் இயோல் தப்பிச் செல்லாமல் இருக்க வெளிநாடுகளுக்கு பயணம் செய்ய அவருக்கு அரசாங்கம் தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஹெய்ட்டியில் வன்முறை; 184 பேர் படு கொலை




ஹெய்ட்டியின் சிட் சோலைல் (Cite Soleil) பகுதியில் கடந்த வார இறுதியில் சுமார் 184 பேர் கொல்லப்பட்டதாக அந் நாட்டு பிரதம அமைச்சரின் அலுவலகம் நேற்று (09) குறிப்பிட்டுள்ளது.

தாக்குதல் தொடர்பில் தேசிய மனித உரிமைகள் பாதுகாப்பு வலையமைப்பு (RNDDH), ஒரு உள்ளூர் கும்பல் தலைவரின் மகன் நோய்வாய்ப்பட்டு பின்னர் உயிரிழந்த நிலையில், இந்த தாக்குதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளது. சிறுவனின் மர்ம நோய்க்கு "சூனியம்" செய்யும் வயதான உள்ளூர்வாசிகளைக் குற்றம் சாட்டிய பில்லி சூனியப் பாதிரியாரிடம், கும்பலின் தலைவர் ஆலோசனை பெற்றுக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.கொல்லப்பட்டவர்களில் கிட்டத்தட்ட 130 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் என தெரிவித்த ஐ.நா, வன்முறையை மேற்கொண்ட கும்பல் உயிரழந்தவர்களின் உடல்களை எரித்து கடலில் வீசியதாகவும் குறிப்பிட்டது. இந்தக் கொலைகளுடன் ஹெய்ட்டியில் இந்த ஆண்டு வன்முறையால் உயிரிழந்தவர்களின் எண்ணிக் கையானது 5 ஆயிரத்தையும் விஞ்சியு ள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

# அமெரிக்க நீதித்துறையில் இந்திய பெண் தில்லான்



சிவில் உரிமைகளுக்கான உதவி சட்டமா அதிபராக ஹர்மீத் கே தில்லான் பரிந்துரைக்கப்பட்டார்.

தொழில்நுட்ப தணிக்கையை சவால் செய்ததற்காகவும் மத சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காகவும் டிரம்ப் அவரைப் பாராட்டினார்.

சண்டிகரில் பிறந்த தில்லான், 2006 இல சட்டக் குழுவை நிறுவினார்.

அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் டிரம்ப், இந்திய அமெரிக்க வழக்கறிஞர் ஹர்மீத் கே தில்லானை, நீதித் துறையின் சிவில் உரிமைகளுக்கான உதவி சட்டமா அதிபராக திங்கட்கிழமை(09) நியமித்தார்.

டிரம்ப் அமைச்சரவையில் டாக்டர் ஜே பட்டாச்சார்யா (National Institutes of Health) , விவேக் ராமசுவாமி (அரசாங்கத் திறன் துறை,DOGE) மற்றும் காஷ்யப் காஷ் படேல் (FBI இன் இயக்குநர்) ஆகியோருக்குப் பிறகு அமைச்சரவையில் பரிந்துரைக்கப்பட்ட நான்காவது இந்திய அமெரிக்கர் தில்லான் ஆவார்.

ட்ரூத் சமூக வலைத்தளத்தில் இடுகையில், பேச்சு சுதந்திரத்தை தொழில்நுட்ப நிறுவனங்கள் தணிக்கை செய்ததற்கான வழக்கினை எடுத்துக்கொண்டதற்காக, கோவிட் -19 தொற்றுநோய்களின் போது ஒன்றாக பிரார்த்தனை செய்வதிலிருந்து தடுக்கப்பட்ட கிறிஸ்தவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியதற்காக மேலும் தங்கள் தொழிலாளர்களுக்கு எதிராக பாகுபாடு காட்ட விழித்திருக்கும் கொள்கைகளைப் பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்த காரணத்திற்காக டிரம்ப் தில்லானை பாராட்டினார்.

தில்லான் நாட்டின் தலைசிறந்த வழக்கறிஞர்களில் ஒருவர். சீக்கிய மத சமூகத்தின் மரியாதைக்குரிய உறுப்பினர். அரசியலமைப்பு உரிமைகளின் அயராத பாதுகாவலர், மேலும் எமது சிவில் உரிமைகள் மற்றும் தேர்தல் சட்டங்களை நியாயமாகவும் உறுதியாகவும் செயல்படுத்துவோம் என டிரம்ப் குறிப்பிட்டார்.

தில்லான், டிரம்பின் உதவி சட்டமா அதிபராக தேர்வான பாம்போண்டி (PamBondi) தலைமையிலான நம்பமுடியாத வழக்கறிஞர்கள் குழுவின் ஒரு பகுதியாக பரிந்துரைக்கப்பட்டதற்கு தான் மிகவும் பெருமைப்படுகிறேன் என குறிப்பிட்டார். மேலும் எமது நாட்டின் சிவில் உரிமைகள் நிகழ்ச்சி நிரலுக்கு உதவ, ஜனாதிபதி ட்ரம்பின் நியமனத்தால் நான் மிகவும் கௌரவிக்கப்படுகிறேன். எமது சிறந்த நாட்டிற்கு சேவை செய்ய வேண்டும் என்பது எனது கனவாக இருந்தது, மேலும் அமெரிக்க நீதித்துறையின் தலைமையிலான ஒரு நம்பமுடியாத வழக்கறிஞர்கள் குழுவில் ஒரு பகுதியாக இருப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன் என எக்ஸ் வலைத்தள பதிவில் குறிப்பிட்டிருந்தார்.

எனது அற்புதமான தாய் மற்றும் சகோதரரின் ஆதரவு இல்லாமல் நான் இன்று இங்கு இருக்க மாட்டேன், என் அன்புக்குரிய தந்தை தேஜ்பால் மற்றும் கணவர் சர்வ் ஆகியோர் இந்த நாளைக் காணவில்லை. அவர்களின் நினைவுகளை நான் மதிக்கிறேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# இராணுவ ஹெலிகொப்டர்கள் மோதி விபத்து:

### ஐந்து வீரர்கள் பலி

துருக்கியின் இஸ்பார்டா மாகாணத்தில் உள்ள இராணுவ தளத்தில் வழக்கமான பயிற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த ஹெலிகொப்டர்கள் ஒன்றுக்கொன்று மோதி இராணுவ தளபதி உட்பட



ஐந்து வீரர்கள் உடல் சிதறி உயிரிழந்துள்ளனர். இதில் ஒரு ஹெலிகொப்டர் கீழே விழுந்து சுக்கு நூறாக நொறுங்கியது. அதேசமயம் மற்றொரு ஹெலிகொப்டர் பாதுகாப்பாக தரையிறங்கியுள்ளது. இந்த விபத்து குறித்து விமான போக்குவரத்து துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


# காசாவில் 44,758 பேர் உயிரிழப்பு

காசா பகுதியில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 44,758 ஆக அதிகரித்துள்ளது என காசா சுகாதாரத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

காசா பகுதியில் இஸ்ரேல் இராணுவம் கடந்த ஆண்டு அக்டோபர் 7 முதல் நடத்தி வரும் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 44,758 ஆக அதிகரித்துள்ளதுடன் அது தவிர இஸ்ரேல் குண்டு வீச்சில் இதுவரை 106,134 பலஸ்தீனர்கள் காயமடைந்தனர் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ரஷ்யாவின் மோசடி மையம் மீது சோதனை

ஐரோப்பிய ஒன்றியம் உட்பட 50 நாடுகளில் 100,000 பேரை ஏமாற்றிய ஒரு மோசடி அழைப்பு மையத்தை சோதனை செய்ததாக ரஷ்யாவின் உளவுத்துறை (FSB) திங்கட்கிழமை(10) தெரிவித்துள்ளது.



உளவுத்துறை நிறுவனத்தால் பகிரப்பட்ட காணொளியில், முகமூடி அணிந்த முகவர்கள் வணிக மையத்தினுள் நுழைந்து, பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஊழியர்களை சுற்றி வளைத்து, தொலைத்தொடர்பு மையத்தில் உள்ள கணினிகள் உள்ளிட்ட ஏனைய பகுதிகளை ஆய்வு செய்வதைக் காட்டியது.

இந்த மையம் ஐரோப்பிய ஒன்றியம், இங்கிலாந்து, கனடா, பிரேசில், இந்தியா, ஜப்பான் மற்றும் பிற நாடுகளின் குடிமக்களுக்கு எதிராக முதலீட்டு ஒப்பந்தங்கள் என்ற போர்வையில் பெரும் மோசடியில் ஈடுபட்டுள்ள சர்வதேச ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற வலயத்தின் ஒரு பகுதியாகும் என்று FSB கூறியது. அதன் சட்டவிரோத நடவடிக்கைகளின் மூலம் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருவாய் அன்றாடம் ஈட்டப்பட்டதாகவும் விசாரணையில் கண்டறியப்பட்டது.

இந்த சோதனையின் போது, இஸ்ரேலிய-உக்ரேனிய குடிமகன் கெசெல்மன் யா டி உட்பட பல முக்கிய செயற்பாட்டாளர்களை FSB கைது செய்தது.

அதே நேரத்தில் இஸ்ரேலிய ஜோர்ஜிய குடிமகன் டோட்வா டி தப்பியோடியுள்ளார். இவர்கள் இருவரும் இந்த நடவடிக்கையை திட்டமிட்டதாகவும், ரஷ்யாவில் தவறான பயங்கரவாத தாக்குதல் அச்சுறுத்தல்களை பரப்புவதில் தொடர்பு கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சோதனையில் கைது செய்யப்பட்ட 11 பேர் குற்றவியல் குழுவை ஏற்பாடு செய்தமை, பயங்கரவாதத்தின் தவறான அச்சுறுத்தல் மற்றும் பெரிய அளவிலான மோசடி ஆகிய குற்றச்சாட்டுகளை எதிர்கொள்வதாக ரஷ்யாவின் FSB குறிப்பிட்டுள்ளது.

# போரை நிறுத்த முடியாது இஸ்ரேல் பிரதமர் திட்டவட்டம்



போரை நிறுத்த முடியாது காசாவில் தாக்குதலை தொடர்வோம் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவிததுள்ளார். இஸ்ரேல் ஹமாஸ் இடையே ஒரு வருடங்களுக்கு மேலாக போர் நடந்து வருகிறது. இதனால் இஸ்ரேலை சேர்ந்த 1028 பேர் கொல்லப்பட்டனர். இஸ்ரேலில் இருந்து 251 பேரை பிணைக்கைதிகளாக ஹமாஸ் படையினர் பிடித்துச் சென்றனர். அவர்களில் அநேகமானோர் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஒரு சிலர் உயிரிழந்த நிலையில் இன்னும் நூறு பேருக்கு மேல் பிணைக்கைதிகளாக ஹமாஸ் வசம் உள்ளனர்.

இந்நிலையில் நிருபர்கள் சந்திப்பில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறியதாவது:

நாங்கள் இப்போது போரை நிறுத்தினால் ஹமாஸ் மீண்டும் வந்து தாக்கலாம். இவ்வாறு நடப்பதை நாங்கள் விரும்பவில்லை. போரை இப்போது நிறுத்த முடியாது. காசாவில் தாக்குதலை தொடர்வோம். ஹமாஸை அழித்தொழித்தல் மற்றும் அதன் இராணுவ மற்றும் நிர்வாக திறன்களை ஒழித்தல் போன்ற இலக்கை நிர்ணயித்துள்ளோம். இஸ்ரேல் ஹமாஸ் இடையிலான போர் நிறுத்தம் தொடர்பான முயற்சிகள் நடைபெற்று வரும் நிலையில் போரை நிறுத்த மாட்டேன் என இஸ்ரேல் பிரதமர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

# முகமட் சிராஜுக்கு அபராதம் விதிப்பு




அவுஸ்திரேலிய அணியின் துடுப்பாட்ட வீரரான டிராவிஸ் ஹெட் உடனான மோதல் சம்பவத்தில் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் முகமட் சிராஜுக்கு சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் அபராதம் விதிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணத்தில் 5 போட்டிகள் கொண்ட பார்டர்-கவாஸ்கர் டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகிறது.

இரண்டாவது டெஸ்ட் போட்டியின் போது ஆஸ்திரேலியா அணியின் துடுப்பாட்ட வீரர் டிராவிஸ் ஹெட், ஒருநாள் போட்டியைப் போன்று விளையாடி அதிரடியாக ஓட்டங்களை சேர்த்தார். 141 பந்துகளில் 4 சிக்சர், 17 பவுண்டரியுடன் 140 ஓட்டங்கள் எடுத்தார். இவரை இந்திய அணியின் பந்து வீச்சாளர் சிராஜ் போல்ட் முறையில் ஆட்டமிழக்கச் செய்து வெளியேற்றினார்.

அப்போது இருவருக்கும் இடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது. இது தொடர்பான வீடியோ சமூக வலைத்தளங்களில் வெளிவந்த நிலையில் சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்த நிலையில் ஐசிசி அபராதம் விதிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

சிராஜுக்கு அவரது போட்டி கட்டணத்தில் 20% அபராதத் தொகையாக விதிக்கப்பட்டு இருக்கிறது. மேலும் இருவரும் டி-மெரிட் என்ற நடத்தைக்கான புள்ளியை பெற்றுள்ளனர்.

இந்நிலையில், இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா அணிகள் மோதும் மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சனிக்கிழமை பிரிஸ்பேன் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# ஐசிசிக்கு இந்திய கிரிக்கெட் சபை கடிதம்




சாம்பியன்ஸ் கிண்ணத்தில் இந்திய அணிக்கான போட்டிகளை, 'ஹைபிரிட்' முறையில் வேறு நாட்டில் நடத்த வேண்டும் என ஐசிசிக்கு இந்திய கிரிக்கெட் சபை கடிதம் எழுதியிருந்தது. இந்த கோரிக்கையை ஐசிசி ஏற்றுக்கொள்ளும் என்றே கூறப்படுகிறது.

2025 ல் நடைபெறவுள்ள சாம்பியன்ஸ் கிண்ண தொடருக்கான சலசலப்பு இன்னும் நிறைவடையாமல் உள்ள நிலையில், பாகிஸ்தான் கிரிக்கெட் சங்கம், ஐசிசியிடமிருந்து எழுத்துப்பூர்வமான உத்தரவாதத்தை கோரியுள்ளது. அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் 19ஆம் திகதியிலிருந்து மார்ச் 9ஆம் தேதி வரை சாம்பியன்ஸ் கிண்ணம் தொடர் நடைபெறவுள்ளது.

இந்த தொடரை பாகிஸ்தான் கிரிக்கெட் சங்கம் நடத்துகிறது. ஆனால் இந்த தொடருக்காக பாகிஸ்தான் செல்ல இந்திய கிரிக்கெட் சபை மறுத்து வருகிறமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவின் வெற்றிக்கு ஹர்பஜன் சிங் ஆலோசனை



இந்திய கிரிக்கெட் அணி வெற்றிப் பாதைக்கு திரும்புவதற்கு ஒரு விஷயத்தை சரி செய்ய வேண்டும் என முன்னாள் கிரிக்கெட் வீரர் ஹர்பஜன் சிங் ஆலோசனை கூறியுள்ளார்.

"இந்திய அணி வலுவான இணைப்பாட்டத்தை ஏற்படுத்தவில்லை. இதற்கு இனிவரும் டெஸ்ட் போட்டிகளில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். முதல் டெஸ்டில் இந்திய அணி வெற்றி பெற முக்கிய காரணம் சிறப்பான இணைப்பாட்டம் அமைத்தது. ஒரு இன்னிங்ஸில் 300 முதல் 350 ஓட்டங்கள் வரை துடுப்பாட்ட வீரர்கள் எடுத்துக் கொடுத்தால் மட்டுமே, பந்து வீச்சாளர்கள் மிகச் சிறப்பாக பந்து வீசி எதிரணியின் விக்கெட்டுகளை வீழ்த்த முடியும். பந்துவீச்சில் இந்திய அணி மோசமாக உள்ளது என்பதில் சந்தேகம் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா இடையிலான 3-ஆவது டெஸ்ட் போட்டி பிரிஸ்பேன் மைதானத்தில் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

அவுஸ்திரேலியாவை விடவும் இந்திய அணிக்கு இந்த கிரிக்கெட் தொடர் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. ஏனென்றால் இந்த தொடரை கைப்பற்றினால் மட்டுமே இந்திய அணி டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்க முடியும். இன்னும் 3 போட்டிகள் மீதம் உள்ள நிலையில் இந்திய அணி அவை அனைத்திலும் வெற்றி பெற முனைப்பு காட்ட வேண்டும்.

சிங்கப்பூரில் நடைபெற்று வரும் உலக செஸ் சாம்பியன்ஷிப் தொடரில் நடப்பு சாம்பியனான சீன வீரர் டிங் லிரனை எதிர்த்து இந்தியா சார்பாக தமிழகத்தை சேர்ந்த கிராண்ட் மாஸ்டர் குகேஷ் விளையாடி வெற்றி பெற்றுள்ளார்.

10 சுற்றுகள் வரை நடைபெற்ற போட்டியில், இரு வீரர்களும் தலா ஒரு வெற்றியை பெற்றனர். பிற ஆட்டங்கள் அனைத்தும் சமனில் முடிவடைந்தன. இந்நிலையில் ஞாயிறன்று நடைபெற்ற 11ஆவது சுற்றுப் போட்டியில் இரு வீரர்களும் மிகவும் நிதானமாக விளையாடினர்.

16 நகர்தலுக்காக டிங் 8 நிமிடங்களையும், 15 நகர்தலுக்காக குகேஷ் 15 நிமிடங்களையும் எடுத்துக் கொண்டனர். இதனால் ஏற்பட்ட அழுத்தம் காரணமாக, 28ஆவது நகர்த்தலில் டிங் தவறான ஒரு நகர்த்தலை மேற்கொண்டார். இதை சரியாகப் பயன்படுத்திக் கொண்ட குகேஷ், ஆட்டத்தை வசப்படுத்தினார். இதையடுத்து தோல்வியை ஒப்புக் கொண்டார் டிங்.

# உலக செஸ் சாம்பியன்ஷிப்; நடப்பு சாம்பியன் சீன வீரர் டிங் தோல்வி



# இந்திய கிரிக்கெட் சபையின் இடைக்கால செயலாளராக தேவஜித்



இந்திய கிரிக்கெட் சபையின் இடைக்கால செயலாளராக தேவஜித் சைகியாவை தலைவர் ரோஜர் பின்னி நியமித்துள்ளார். சைகியா இதற்கு முன்னர் இணை செயலாளர் பதவி வகித்துள்ளார். புதிய செயலாளரை தேர்ந்தெடுக்கும் வரையில் இவர் இந்த பதவியில் இருப்பார்.

இந்திய கிரிக்கெட் சபையின் (பி.சி.சி.ஐ.) செயலாளராக இருந்த ஜெய்ஷா சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐ.சி.சி.) புதிய தலைவராக கடந்த 1 ஆம் திகதி பொறுப்பேற்றார். இதனால் இந்திய கிரிக்கெட் வாரியத்திற்கு புதிய செயலாளரை நியமிக்க வேண்டியுள்ளது கிரிக்கெட் சபை விதிப்படி இந்த பதவியை 45 நாட்களுக்குள் நிரப்ப வேண்டும்.

# சகல விளையாட்டுகளும் ஒலிம்பிக்கை இலக்காக நோக்க வேண்டும்

## விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் சுகத் திலகரத்ன



சகல விளையாட்டுகளையும் ஒலிம்பிக் போட்டிகளின் இலக்கை நோக்கி கொண்டு செல்லும் திட்டங்கள் 2025 ஜனவரி முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படும் என பிரதி அமைச்சர் சுகத் திலகரத்ன நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

அத்தோடு விளையாட்டிலிருந்து அரசியலை முற்றாக நீக்கி, 2028 ஆம் ஆண்டை ஒரு ஒலிம்பிக் வருடமாக எதிர்பார்க்கலாம் என்றார்.

தேசிய வில்வித்தை சம்பியன்ஷிப் போட்டியில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் விளையாட்டுக்கள் தேக்கமடையாமல் விளையாட்டுக் கழகங்களில் நிலவும் பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்படும். விளையாட்டின் மூலம் முன்னேறக்கூடிய அழகான நாட்டிற்குள் வளமான நாட்டை உருவாக்கும் தேசிய நோக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

எமது நாட்டின் அனைத்து விளையாட்டுகளையும் சர்வதேச வெற்றிக்கு கொண்டு செல்லும் பொறுப்பு விளையாட்டுத்துறை அமைச்சிற்கு உள்ளது. அனைவரும் ஒன்றிணைந்து அதனை உருவாக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2024 டிசம்பர் 11ம் திகதி புதன்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.